குடி அரசு

ஞாயிறுதோறும் வெளிவரும்.

ஆசிரியர்:- ஈ. வெ. கிருஷ்ணசாமி.

மலர் 22. | ஈரோடு, பவ-ஹ சித்திரை-மீ 10-உ (22—4—1934) | மலர் 22.

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட்,

ஈரோடு.

—※—

3 அரு வெளியீடுகள்.

ஆசிரியர் கே. பிரமச்சாரி எம். ஏ. எல். டி. எழுதியது.

மதமும் விஞ்ஞான சாஸ்திரமும்:— இந்நூலில் மதத்திற்கும் விஞ்ஞான சாஸ்திரங்களுக்குமுள்ள முரண்பாடுகளைத் தெளிவாய் விளக்கப்பட்டிருக்கிறது.

பிரபஞ்ச உற்பத்தி:— இந்நூலில் பரிணம வாதக்கொள்கைப்படி உலகம் எவ்வாறு தோன்றப்பட்டது என்பதை ஆராய்ச்சி பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

—※—

தோழர் ஈ. வெ. இராமசாமி எழுதியது.

பிரகிருதிவாதம்:—இந்நூலில் கடவுள், மதம், ஆத்மா, மோட்ச நரகம், பாவ புண்ணியம், ஒழுக்கம் முதலியவைகளின் தன்மைகளையும் லோகாயத வாழ்க்கையின் அவசியத்தையும் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

வெ. ரா. சொற்பொழிவு
விலை அணா 2,

அகத்தியர் ஆராய்ச்சி
விலை அணா 2.

இராமலிங்க சுவாமிகள் பாடல்
விலை அணா 2.

சுயமரியாதைப் பாடல்
விலை அணா 2.

கதர்மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)
விலை அணா 2.

சுயமரியாதை தாலாட்டு
விலை அணா 2.

சோதிடப் புரட்டு
விலை அணா 2.

பார்னர்ட்ஷா உபந்யாசம்
விலை அணா 1.

இலங்கை உபந்யாசம்
விலை அரை அணா.

கத்தோலிக்கர் வீண் கூச்சல்
விலை அரை அணா.

குடி அரசு புத்தகாலயம் ஈரோடு.

விற்பனைக்காக நம்மிடம் உள்ள இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

சிதம்பர ரகசியம்	...	0—8—0
சுதந்தரப்போர் அல்லது உப்பள முற்றுகை		0—4—0
மாதர் சுதந்தரம் or பெண்மக்கள் பெருமை		0—8—0
பகுத்தறிவே விடுதலை அல்லது ஜீவாத்மாஇல்லை		0—6—0
மோட்டார் இயந்திர சாஸ்திரமும் அதன் அனுபோக பயிற்சி முறையும்	...	2—0—0
ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் விலை	...	0—6—0
சுயராஜ்யம் யாருக்கு	...	0—1—0
சாமிகளின் அடிமைகள்	...	0—12—0
சென்னை லோக்கல் போர்டு ஆக்ட்	...	2—0—0
பகுத்தறிவு கீதம்	...	0—1—0
காந்தி கிட்டு	...	0—1—0

பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகப் புஸ்தகங்கள் நம்மிடம் கிடைக்கும்.

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 7 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாகபைண்ட் செய்து புஸ்தகமாகவைக்கப்பட்டிருக்கிறது

ஒவ்வொரு வருஷமாலை கிரயம் ரூ. 4—0—0
ரிவோல்ட்டு ஒருவருஷமாலை செய்தது கிரயம் ரூ. 4—0—0

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

வெளிவந்து விட்டது!

நமது புதிய பிரசுரங்கள்!!

சோஷியலிசம்.

உலகானுபவப் பேரறிஞர் ஜியார்ஜ் பர்ணட்ஷா எழுதிய "Intellegint womans guide to Socialism" என்ற நூலைத் தழுவி, காலஞ் சென்ற தோழர் சே. நரசிம்மன் எம்.ஏ. அவர்களால் எழுதப்பட்டது. ஒவ்வொருவரும் தவறாது படித்துப் படித்துப் பார்க்கவேண்டிய நூல், விலை அணா 3.

சமதர்ம உபன்யாசம்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களின் தமிழ் மாகாண சமதர்ம மகாநாட்டின் சமதர்ம உபன்யாசம் புஸ்தக ரூபத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. விலை அரை அணா. தனிப்பிரதி வேண்டுவோர் ஒரு அணா ஸ்டாம்பு அனுப்பவும்.
50 காப்பிகள் 1—4—0. 100 காப்பிகள் 2—0—0. 500 காப்பிகள் 8—0—0. தபால் செலவு வேறு.

போல்ஷ்விக் முறை.

விலை அணா 1. தனிப்பிரதி வேண்டுவோர் 1½ அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

விலாசம்:— மானேஜர்,

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

திருநெல்வேலியில் சைவர் மகாநாடா? தமிழர் மகாநாடா?

(Navagar)

நமது மாகாண தமிழர் இரண்டாவது மகாநாடு சென்னையில் கூட்டவேண்டுமென்று நமது தோழர்கள் சிலர் முயற்சி செய்தனர். பின்னர் மகாநாட்டை சிரும்சிறப்புடன் தமிழ் நாட்டுப் பிரபலஸ்தர்களின் ஆலோசனையின் மீதும், தகுந்த பிரதி நிதித்துவத்துடனும் நடத்த வேண்டுமென்று தோழர் சி. டி. நாயகம், அன்பர் மே. மாசிலாமணிமுதலியார், அன்பர் வரதராஜுலு நாயுடுகார், முதலிய பேர்களின் யோசனைப்படி மகாநாட்டை சிறிது காலம் தாழ்த்தி நடத்துவதாக மகாநாடு கூட்டும் யோஜனையை ஒத்தி வைத்தனர். இவ்விஷயம் தமிழ் நாட்டிலுள்ள முக்கிய பத்திரிகைகளிலெல்லாம் வெளியிடப்பட்டிருந்தது.

அதன் பின்னர் திருநெல்வேலியிலுள்ள சிலர், மே மகாநாட்டை திருநெல்வேலியிலே மாச் மாத இறுதியில் கூட்டுவதாகப் பத்திரிகையில் அறிக்கை வெளியிடப்பட்டிருந்தது. ஆனால் இம்மகாநாட்டைக் கூட்டுபவர்கள், முன்னரே சென்னையில் மகாநாட்டைக் கூட்டுவதற்காக முயற்சி செய்து கொண்டிருந்த அறிஞர்களுக்கு எவ்விதத்திலும் கொடாது திடீரென்று மகாநாட்டைத் தங்களுரிலே கூட்டுவதாக முயற்சித்தது அத்தனை நியாயமாகாதென்றும், என் போன்றோர்க்கு அதைப்பற்றி ஒரு சிறிதும் கவலையில்லை. என்னென்றால் தமிழர் கலங்கோரியார் எதைச் செய்தாலும் அதை அன்புடன் வரவேற்பவன்-நான் சென்னையில் மகாநாடு கூட்ட முனைத்தவர்களின் சிரமம் குறைந்தது என்று மகிழ்ச்சியடைவேன். ஆனால் திருநெல்வேலியில் கூடும் மகாநாட்டின் அறிக்கைகள் சில, எனது தோழர்கள் சிலரால் எனக்கு அனுப்பப்பட்டன. அவ்வறிக்கைகளைப் படித்ததிலிருந்து ஆங்கு மகாநாடு கூட்டுபவர்கள் பழுத்த-மதப்பித்தேறிய-பழமை பிரும்பிகளான-சைவர்களால்-இல்லை-வேளாளர்களால்கூட்டப்பெறும் மகாநாடென்றும் அம்மகாநாட்டின் நோக்கம் சைவத்தையும், வேளாளர் ஆதிக்கத்தையும், வைதீகத்தையும் வளர்க்கும் நோக்கத்தோடு கூட்டப்போரும் மகாநாடென்றும ஓர் முடிவுக்கு வந்தேன்.

ஏனெனில் அம்மகாநாட்டின் ஆரம்பக் கூட்டம் திருநெல்வேலி நெல்லையப்பர் ஆலயத்திலே கூட்டப்பட்டது. அக்கே ஆதித்திராவிடத் தமிழரோ, மூஸ்லீம் தமிழரோ, கிறிஸ்தவத்தமிழரோ, உட்புக உரிமை கிடையாது. அவர்கள் அழைக்கப் படவுமில்லை. மகாநாட்டிற்குப் போயிருந்தவர்களும் தலைவர், காரியதரிசி, பொக்கிஷதார், கிர்வாக சபை மெம்பர்களும் வேளாளர், முதலியார், செட்டியார்களாகவே காணப்படுகின்றனர். மகாநாட்டின் நோக்கமோ தனித்தமிழ் பித்தமும், சுயமரியாதைக்காரர்களின் பெரும் முயற்சியின் பேரில் சென்னையில் கூடிய தமிழன்பர் மகாநாட்டில் தீர்மானித்த தமிழ் எழுத்தைக் குறைத்தல், விஞ்ஞானத்தை வளர்த்தல், தமிழ் பாடப்புத்தகங்களில் ஜாதி மத வேற்றுமைகளைப் புகுத்தாதிருத்தல் முதலிய தீர்மானங்களுக்கு பாதகஞ் செய்யவே கூட்டுவதாயிருக்கின்றது.

சென்னையில் பார்ப்பனர்களால் கூட்டப்பட்ட தமிழன்பர் மகாநாட்டைவிட திருநெல்வேலியில் சைவர்களால் கூட்டப்போகும் இம்மகாநாடு மிகுந்த பிற்போக்குக்குள்ள மகாநாடாயிருக்கிறது தமிழன்பர் மகாநாட்டாவது பெயரளவிலேனும் சில முஸ்லீம்களையும், பிராமணரல்லாதார்களையும் சைவர்களையும் வைஷ்ணவர்களையுஞ்சேர்த்திருந்தனர். ஆனால்ஜாதித்திமிர்; வைதீகப்பித்தம் பார்ப்பனர்களை விட ஒருடிகிரி கூடிய திருநெல்வேலி வேளாளர், பிறமதஸ்தர், பிறஜாதியார், பிற இயக்கத்தார்களைச் சேர்க்காமலும் அவர்களின் ஆலோசனையைக் கேளாமலும் கூட்டும் இம்மகாநாடு எத்தனை புத்திசாலித்தனத்தோடும் தமிழ்மக்களின் ஆதரவோடும் கூட்டப்பெறுகிறதென்பதை வாசகர்களே தீர்மானித்துக்கொள்ளும்படி உங்களது முடிவிற்கே விட்டுவிடுகிறேன்.

பார்ப்பனர்களால் கூட்டப்பட்ட தமிழன்பர் மகாநாட்டார் தங்களது ஒவ்வொரு அறிக்கைகளையும் எல்லா பத்திரிகைகட்கும் அனுப்பியதோடு எல்லாப்பிரமுகர்களுக்கும் அனுப்பினர். "புரட்சி"யில் அம்மகாநாட்டின் நோக்கங்களையும், நடவடிக்கைகளையும், தலைவர்களையும் கண்டித்து எழுதி ஈரோட்டிலும், சிவகங்கையிலும் கூடிய சுயமரியாதை மகாநாடுகளில் "தமிழன்பர் மகாநாட்டைப் பஹிஷ்காரஞ் செய்யவேண்டும் என்று தீர்மானஞ்செய்த பின்னரும்கூட "புரட்சி" பத்திரிக்கைக்கு அம்மகாநாடடின் அறிக்கைகளும், பிரசங்கங்களும் அழைப்பும் அனுப்பப்பட்டது. தமிழ்நாட்டிலே இன்று தலை சிறந்த பத்திரிகைக்கே இம்மகாநாடு சம்மந்தமாய் ஒரு தகவலும் தொடாது, மகாநாடு கூட்ட முனைந்தது அம்மகாநாட்டைக் கூட்டமுன்வந்த அன்பர்களின் அறியாமையா? அல்லது தொடை நடுங்கித்தனமா? என்பதை என்னால் யூகிக்கமுடியவில்லை. சுருங்கச் சொன்னால் தமிழன்பர் மகாநாட்டைக்கூட்டியப் பார்ப்பனர்களோ இவ்வேளாளர்கள் பரமயோக்கியர்கள் ஆகிவிட்டார்கள் என்பதே எனது முடிபு.

"நம் நாட்டிலே பழையகாலத்தில் தமிழை வளர்த்த கல்லோர்கள் சமணர்கள். இக்காலத்திலே தமிழைவளர்க்கும் வீரர்கள் சுயமரியாதைக்காரர்கள்" இஃது எமது சொந்த அபிப்பிராயமல்ல. திருநெல்வேலிச் சைவப் பெரியாரும், இந்து தேவஸ்தானப் போர்டு கமிஷ்நருமான கனம் டி. கே. சிதம்பரநாத முதலியார், நாகர்கோவில் பிரபல வழக்கறிஞரும் தமிழ்மொழி ஆராய்ச்சி வல்லுவனருமான தோழர் பி. சிதம்பரம் பி. ஏ. பி. எல்., எம். எல். ஏ. திருவாய்மூர், ஆகிய பெரியவர்களின் அபிப்பிராயம், தமிழ்ப்பாஷையை வளர்த்த முன்னவர்களே சைவர்கள் கழுவேற்றினர். பின்னவர்களே அவ்வாறு வதை புரிய நினைந்து இயன்றநெல்லாம் ஒன்றும் ஆகாது மூலையில் முடங்கி விட்டனர். தமிழ்ப்பாஷையிலுள்ள பழைய இலக்கியம், இலக்கணம், காவியம், ஓவியம், நாடகம், நாகரீகம் எல்லாம் சமணர்களுடையதே. சைவர்களால் தமிழ்ப்பாஷையில் செய்யப்பட்ட ஓர் சிறந்த நூலேயோ, அல்லது ஒரு அரிய தொண்டையோ காட்டுதலரிதாகும். ஆனால் தமிழ்ப் பாஷைக்கு இவர்கள் செய்த கேடுகளோ வரிசையாய் அடுக்கிக்கொண்டே போகலாம். ஆனால் சில சைவத்தலைவர்களுக்கு இதைக் கண்டதும் ஆத்திரமுண்டாகி தமிழ்ப்பாஷைக்கு காங்கள் செய்த தொண்டை சுயமரியாதைக்காரர்கள்" அறிய முடியுமா? எக்களாலிபற்றப் பெற்ற நூற்கள் அனலிடற்பாலது. பெரிய புராணம், திருவிளையாடல்புராணம், திருக்குற்றலப்புராணம், திருச்செந்தூர் தலப்புராணம், திருச்செந்தூர் தலப்புராணம், சிவஞான போதம், சிவஞான சித்தியார், தேவாரம், திருவாசகம் என அடுக்கிக்கொண்டே போவர். ஆனால் இவையெல்லாம் தமிழ் மொழிக்கோ தமிழர்க்கோ என்ன பயனை விளைத்தது? என்றால் ஆக்கைகள் போல் விழிப்பர். வினவியவரை, வைவர். ஆனால்" வேளாளரே சைவம், சைவமே தமிழ்; வேளாளருடனே தமிழ்ப் பிறந்தது" என்று ஜம்பம் பேசுவர். ஆனால் உன்னத ஒப்பற்ற இலக்கண இலக்கியங்களையுடையதாகக் கூறும் பழம் பெரும்பாஷைபாகிய பைந்தமிழை நேற்றுநித்த தெலுங்கு, மலையாளம் முதலிய பாஷைகளுக்கும் பல் வேறு துறைகளிலும் பின்னிட்டு இல்லாப்பரான நிலையில் நிற்கும் படி செய்ததற்கு தமிழ் மொழிக்கு கார்டியன் என்ற பெருமை பேசும் இவர்களே (வேளாளர்களே) பொறுப்பானென ஒரு சிறிதும் உணரார். தமிழிலே ஓர் விஞ்ஞான நூலுண்டா? ரசாயன நூலுண்டா? மருத்துவ நூலுண்டா? வான நூலுண்டா? உடற் கூற்று நூலுண்டா? பூமி நூலுண்டா? தாவர நூலுண்டா? பயனுள்ள ஒரு கதைகளோ அறிவியல் நூலோ உண்டென்று எடுத்துக் காட்ட எந்த சைவன் முன்வரக் கூடும்? தமிழ் ஆயிரக்கணக்கான ஆண்டுகட்கு முன்னிருந்த நிலையிலே இன்றும் இருந்துகொண்டிருக்கிறது என்றால் அது ஒரு சிறிதும் மிகையாகா? ஐரோப்பிய அறிஞர்கள் ஒரு சிலரின் உழைப்பாலும், மேனாட்டு நாகரீகத்தாலும், அரசாங்கத்தின் முயற்சியாலும் தமிழ் வசனநடை ஒரு சிறிது வளர்ச்சியுற்றிருக்கிறது எமப். ஆனால் அதற்கும் சைவர்களுக்கும் எத்தனை சம்மந்தமும் இடையாது.

தமிழ் பாஷைக்கு பெருங் கேடு புரிந்த அதன் முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாயிருந்த ஒரு சில்லால் திருநெல்வேலியில் கூடும் தமிழர் மகாநாட்டால் தமிழ்ப்பாஷைக்கோ, தமிழருக்கோ எவ்வித நன்மையும் விளையப் போவதில்லை. ஆனால் அதனால் ஒரு சிறிதாவது தீமைபுனைடென்பது நிச்சயம். இவைகளையெல்லாம் தோழர் சி. டி. நாயகம் அவர்கள் சென்ற வாரம் புரட்சியில் தெளிவுபட விளக்கியுள்ளார்கள். எனவே இவைகளைப்பற்றி மீண்டும் விளக்குவது அனுவசியமென்றே கருதுகின்றேன்.

எனவே தொலைவாய்சுயமரியாதைத் தோழர்களும் சிறப்பாக தென்திருவிதாங்கூர் திருநெல்வேலி ராமநாதபுரம் ஜில்லா சுயமரியாதைத்தோழர்களெல்லோரும் தாளது மேம்ரதும் திருநெல் வேலியில் கூட்டப்போகும் நமது மகாண இரண்டாவது மகாநாட்டில் வெகுதீவிரமாய்க்கலந்து கொள்ளும்படி அன்புடன் கேட்டுக் கொள்கிறேன். அம்மகா நாட்டிற்கு தோழர் சி. டி. நாயகம் அவர்கள் அன்பர் மே. மாசிலா மணி அவர்களும் போகப் போவதாகத்தெரிகிறது, இன்னும் நமது தோழர்களான ஈ. வெ. கிருஷ்ணசாமி, கி. ஆடிறஜன், குருசாமி, குஞ்சிதம், பொன்னம்பலனர், ஜீவானந்தம், ரத்னசபாபதி, அண்ணப்பூரணி அழகிரிசாமி முதலியவர்களையும் அவசியம் செல்லும்படி கேட்டுக் கொள்கிறேன்.

நமது தோழர்கள் விஜயஞ்செய்தால் அம்மகாநாட்டால் தமிழ் தோழர்களுக்கு நலம் விளையாவிடினும் கெடுதி நிகழாது பார்த்துக் கொள்ள முடியும். சுயமரியாதைக்காரனுக்கு படிப்பில்லை ஆராய்ச்சியில்லை என்று சைவப்பண்டிதர்கள் பிதற்றித்திரியும் கூக்குரலடங்கும். அப்ப

தொடர்ச்சி 18-ம் பக்கம் பார்க்க

"மதமும்— மனித ஒழுக்கமும்"

(சென்னை தோழர் கே. எஸ். நாதன்)

இன்றைய நம் நாட்டில் சுயமரியாதைக்காரர்கள் ஜாதியையும் மதத்தையும் அழிக்கவேண்டுமென தீவிரபிரசாரம் செய்துவருகையில், இதற்குமுட்டுக்கட்டையாக மதமும், ஜாதியும் இருந்துதான் தீரவேண்டுமென பிரசாரஞ்செய்யஒருசாரார்தோன்றியிருக்கின்றனர். இவர்கள் சுயமரியாதைக்காரர்கள் எவ்வளவுதூரம் தீவிரஉணர்ச்சியுடன்தங்களது கொள்கைகளை பரப்புகின்றனரோ. அவ்வளவுதூரமும் முட்டுக்கட்டையாகவே இருக்கின்றனர். ஆயினும் இவர்களுக்குள்ளேயே ஒருபடி உயர்ந்தவர்களும் இருக்கின்றனர். அவர்களோடுதான் சேர்திருத்தவாதிகளென ஒருகையில் அழைகப்படுகின்றது. இவர்களுடைய முக்கியகருத்து இன்றையவாழ்க்கையில்நம்மை மிகக் கேவலப்படுத்தி மனிதனை மனிதன் பிரித்து கீழ்ப்படுத்தும் "தீண்டாமை" என்ற பழக்கத்தை அழிக்க வேண்டுமென்பதாகும் இத்தீண்டாமை முதலாமாக ஒழியுமுன் இவர்கள் திருப்தி அடைவர். மற்றவர்களோ இத்தீண்டாமை என்பதும் மதமென்பதும் கட்டாயமாக நிலைக்கவேண்டுமென உழைப்பவர்களாவர். ஆனால் இவ்விரு கண்பர்களும் சுயமரியாதைக்காரர்களிடத்தில் இதர ஒரு விஷயத்தில் ஏக மூச்சாகப் பகைமைகொள்ளுகின்றனர் அதுதான் இவ்விருவர்களாலும் வழங்கப்பட்டும், அனுசரிக்கப்பட்டும் வரும் "மதம்" எனும் வேற்றுமை விருக்குமாகும். சுயமரியாதைக்காரர்கள் இத்த வேற்றுமை விருக்கும் மக்களுக்குள் பகைமையையும்தொடிய சண்டை சச்சரவுகளையும் எற்படுத்தி ஒற்றுமையின்மை சகோதரத்துவத்திற்கு மாறுபாடாகத் தோன்றுவதால்பொருட்டும் இன்னும் இந்த மதமென்ற பெயரளவில் வாழ்க்கையில் நாளுக்குநாள் புதிகப் பொருளை வீண் சிலவுகளுக்காகப் பயன்படுத்தி, மக்கள் தகுகன் இன்ப கேட்டகையை அடையாமல் மடிகின்றனர். ஆதலால் இத்தகைய பாதகத்திற்குட்படுத்தும் மதத்தை அழிதது, சகோதரத்துவத்துவத்தை நிலவிஞலன்றி உண்மைச் சமத்துவத்தை அடையோம் என்பதாக அறைகூவுகின்றோம். ஆனால் இச் சமயத்தில் மேற்குறிப்பிட்ட இருவகுப் பினர்களும் ஒன்றுசேர்ந்து நாம் கூறுவதை எதிர்க்கின்றனர். இதைப்பற்றி நமக்குக் கவலையில்லை. நம் கொள்கைகளில் உண்மை நிரம்பியிருப்பதால் நாமே வெற்றிபெறுவோமென்பது நிச்சயம் ஆனால் இந்த எதிர்ப்பாளர்கள் முக்கியமாக அடிப்படையாகக் கூறுவதாவது:—

"இன்று உலகில்பெரியோர்களால் அறிவாளிகளால் ஏற்படுத்தப்பட்ட மதத்தின் முக்கிய கருத்துகளெல்லாம் மனிதன் நீதிநெறி தவறுதலுமே ஒழுங்காக ஒருவனுக்குமே இடுக்கண்புரியாமல் வாழவேண்டுமென்பதாகும் ஆதலின் இப்படிப்பட்ட உயரிய தத்துவங்களையுடைய மதம் அழியுமாயின் மனித ஒழுக்கமும் கெட்டுவிடும் என்கின்றனர்" இவர்கள் கூறும் இந்த சொண்டிச் சமாதானத்தை நாம் சற்று ஆராயவேண்டியவர்களாயிருக்கின்றோம்.

'மதவாதிகளும் மதத்தின் தத்துவமும்'

இன்று உலகில் நடைமுறையில் அனுசரிக்கப்பட்டுவரும்ஒவ்வொருமதத்தைக் குறித்தும் அவைகளினேத்தையும் தோற்றுவித்தவர்களைக்குறித்தும் பலர் பலவகையில் கூறிப் புகழ்கின்றனர். ஆனால் இந்த மதவாதிகள் மதத்தைப்பற்றிக் கூறும் வார்த்தைகளெல்லாம்உற்றுக்கவனிப்பின் அவைகள் பொருத்தமற்றவைகளாகும். அதாவது இவர்கள் கூறுவது மதம் பல்லாயிரமான வருடங்களுக்குமுன் மக்களின் முன்னேற்றக் கருதி அமைக்கப்பட்ட ஓர் அரிய நூலாகும். அத்நூல் மனிதன் எவ்விதத்த வகையில் ஒழுகினால் பரமாத்மாவென்றும் நிர்மலனென்றும் சர்வசக்தி பென்றும், சர்வ வல்லமைய னென்றும், இன்னும் பலவகையில் அழைக்கப்படும், கடவுளோபடைத்து விண்ணுலகில் இன்புற்று வாழமுடியுமென்கின்றனர். இன்னும் சில நவீனர்கள் மதமென்றாலென்ன? என்பதாகக் கூறமுடியாது, அதை நம்மவரில் பலரும் உணர்ந்துளனர் ஆனால் அதைத் திருப்திகரமான முறையில் விளக்க இயலாதவர்களாகின்றனர். இன்னும் பெரோட்ரிச் ஷெலீர்மேகர் (Friedrich Schleiermacher) என்பவரின் கருத்தாவது ஒரு பொருளை அடிப்படையாகக்கொண்டு தியானிப்பதே மதத்தின் கருத்தாகும். அதாவது இந்த உலகையோ அல்லது கடவுளையோ (Discourses on Religion Chapter II.) அல்லன் மெனஸீஸ் (Allan Monzies) என்பவர் கூறுவதாவது:-

தேவையாயிருக்கும் ஒரு நிலைமையிலிருந்து ஓர் உயரிய பொருளை தியானிப்பதையே மதமென அழைக்கப்படும். (History of Religion Rev. Ed: 1907) இன்னும் இரு பிரபல வேதாந்திகள் கூறுவதாவது:-

"உருவமற்ற ஓர் உயரிய பொருளிடத்தில நம் சாதாரண வாழ்க்கையை பிணைப்பதாகும்". ஜோசியா ரோய்ஸ் (Josiah Royce) (Psychological Study of Religion P. 357) வில்லியம் ஜேம்ஸ் (William James) கருத்தாவது:-

உயரிய தத்துவத்துடனும், பொதுவாகவும் கூறமுடியுமானால் மத நம்பிக்கையை உலகிய வாழ்க்கை கண்ணுக்குப் புலனாகும் ஒருவஸ்துவாக இருக்கிறதென்றும் நமதுவாழ்க்கையை அதற்கேற்றாற்போல் அமைத்துக்கொள்ளுதுமாகும் இந்த நம்பிக்கையும் அமைப்புமே 'ஜீவன்' மூர்த்தியை அடைவதற்குரிய வழியாகும். இதுதான் மதம் என்கிறார். (Varieties of Religious Experience P 53) ஹோப்கின்ஸ் என்பவர் கூறுவதாவது (E. W. Hopkins) மனிதவாழ்க்கையைஒப்புயர்வற்றவாழ்க்கையுடன் பிணைப்பதே மதமாகும் எல்லா மதத்திற்கும் அடிப்படையாகக் காணப்படுவது உயரிய ஒரு சக்தியுடன் நம்மைவாழ்ந்து நம்வாழ்க்கையை அதற்கேற்றார்போல் அமைத்து நம்பிக்கைகொண்டு இன்பமாக வாழ்வதாகும். (History of Religion P. 2) இவ்வகையிலெல்லாம் சில ஆங்கிலேயர்களால் மதத்தைப் பற்றி கூறும் வியாக்யானங்களாகும். இன்னும் நம்நாட்டிலோ மதத்தைப் பற்றி பலர் பலவிதமாகக் கூறுகின்றனர்.

"மதமும் தற்காலிக நிலைமையும்"

நாம் முன் எடுத்துக்காட்டியுள்ள உதாரணங்கள் இன்றைய மனித வாழ்க்கையில் எவ்வளவுதூரம் அனுசரிக்கப் பட்டு வருகின்றதென்பதை நாம் ஆராயப்புகுமின் அது முற்றிலும் முரண்பாடாகவே தோற்றுகின்றது உயரிய ஒரு பொருளோடு நம்வாழ்க்கையையும் பிணைக்கப்பட வேண்டுமெனக்கூறும் இம்மதவாதிகள் இவைகளைக்கூறி ஆமரமக்களை கல்வி அறிவுஇல்லாத மக்களை ஏமாற்றுவதை நாம் பிரத்யட்சமாக கண்டுள்ளோம். இந்த மதத்தாகர்கள்கூறுவதைப்போல் செய்யின் தமக்கு ஏதோ இதுவரையில் கிடைக்கப் பெறுத ஒரு அரும் பெரும் பொருள் கிடைத்து இன்புற்று வாழலாம் என நம்மக்கள் கருதுகின்றனர். இதற்காக நாம் காலை முதற் கொண்டு மாலைவரையில் முதலாளியின் கீழ் இரத்தத்தைச் சிந்தி உழைத்து தேடின சிறு பொருளில் பெருபான்மையையும் செலவழிக்கின்றான். உதாரணமாக தமது தாய் தந்தையர்களோ மற்று ஏனையோர்களோ உயிர்துறந்தால் அதற்கு கிரியைகளென்று, உயிரிய ஜாதியர் என அழைக்கப்படும் பார்ப்பனர்களை வரவழைத்து தட்சினை முதலியவைகளை கொடுத்தனுப்புகின்றான். இப்படி இவன் பார்ப்பனருக்கு பொருள் கொடுத்தவுடன் தமது தாய் தந்தையர்களின் ஆத்மா சாந்தி அடைந்து விட்டதாகவும், அதனால் தமக்கு பெருத்த 'ஆசி' வார்த்தைகள் கிடைத்ததாகவும் நினைக்கின்றனன். உண்மையிலோ எதுவுமில்லை. இவன் சம்பாதித்தகறுபொருள் 'கிரியை' என்றமூடநடங்கின்பேரில் வேறுஒருவனால் கவர்ந்து கொள்ளப்பட்டதாகும். இத்தகுழ்ச்சிகம்மவனுக்கு பிரத்யட்சமாக தெரிந்தபோதிலும், மறைமுகமாக மறைத்துவிட்டு 'மதம்' என்றதற்காகசெலவழிக்கின்றான். நம்நாட்டில் இன்னும் மதத்தின் பேராலால் பலர் தங்கள் வாழ்காட்களை கழிக்கின்றனர். எந்தவிஷயதைதாம் ஆரம்பிக்கமுற்படினும், அதற்கெல்லாம்மதமென்றஒருபெருதத்தபங்கர ஆட்சிடைகாண்பித்து மக்களை ஏமாற்றுகின்றனர் இந்தமதம் இன்று தனிப்பட்டஒரு சிலர்களின் அக்கரங்கசொத்தாகஇருந்து, அவர்களுடையவாழ்க்கையை இன்பமயமாக்கின்றது இன்னும் இதனுடைய புராதீன சரித்திரத்தை பார்தாலும் இவற்றின் பயனுகபலசொல, சண்டைகளும் நம்நாட்டில் நடந்திருப்பதாக சரித்திரத்தின்வாயிலாக அறிகிறோம். ஒவ்வொருமதவாதியும் தம் தம் மதம் உயரினதெனக் கூறிமற்ற மதவாதிகளுடன் தர்க்கம்புரிந்து மேன்மைப்படுமபறுகின்றனன். ஆனாலோ நாட்டிலில் ஒருவிதமான முடிவையும் அடையாமல் குழப்பமடைந்து, இரத்தபெருக்குடன் வீட்டை அடைகின்றனர். இன்னும்மதம் சாதாரணமாக ஒவ்வொருமனிதனுக்கும் இயற்கையில்அமைத்துள்ள சுதந்திர சிந்தனைசக்தியைவெறித்து அடிமைமனப்பான்மையைஉண்டாக்குகிறது சுதந்திரஉணர்ச்சியை உபயோகப்படுத்தாதபெரியோர்கள் அபின் உட்கொண்ட மக்களைப்போல் மதிமயங்கித்தவிக்கின்றனர். இந்த மயக்கசமயத்தை மதஸ்தர்கள் தங்களுக்கோர் அரியசந்தர்ப்பமாகக்கொண்டு, தங்கள் சுயநலஆதிக்கத்தை மதபக்தர்களின் மேல்செலுத்துகின்றனர். ஆனால்இன்று நம் நாட்டில் மதத்திற்கு இருக்துவந்த ஒருபோராதரவு அழிவுபட ஆரம்பித்திருப்பதைக் காண நாம் களிப்புறுகிறோம். மதத்தின் உண்மைக்கருத்துக்களை வெளிப்படுத்தபல அன்பர்கள் தோன்றிதாள் முதற்கொண்டு, பொதுமக்களும் மதஆபாசங்களை அறிந்துக்கொள்ள ஆசைப்படுவதைக்காண்கிறோம்.

மதமும் — ஒழுக்கமும்.

பின், இன்று சுயமரியாதைக்காரர்கள் மதத்தை அழித்தால்தான் உண்மைசகோதரத்வம் நிலவுமெனகூறுகையில், ஒரு சிலர்மனித ஒழுக்க நூலாகியமதம் அழியுமாயின் மனிதவாழ்க்கை ஒழுங்கு, நெறிதவறிவிடுமெ

தொடர்ச்சி 18ம் பக்கம்பார்க்க

தல்ல சந்தர்ப்பம்.

—:0:—

இந்திய காட்டின் பரிபூரண விடுதலையைக் குறிக்கோளாகக் கொண்டு ஆரம்பிக்கப்பட்ட காந்தியின் இயக்கங்கள் ஒரு வழியாய் முடிவடைந்துவிட்டன காந்தியும் அவரது சகாக்களும் பத்து வருடங்களுக்குப்பிறகாவது தங்களது தப்பான வழியை உணர்ந்து தங்கள் போக்கைத் திருப்பியது மிகவும் போற்றத் தக்கதே. காந்தியின் உப்புசத்தியாக்கிரகத் திருவிளையாடல்களின் பயனும் ஏற்பட்ட அடக்குமுறையால் இந்திய அரசியல் விடுதலைக் கிளர்ச்சிகள் ஒருவகையில் ஸ்தம்பித்துப் போய்விட்டனவென்பதைக் காந்தியே ஒப்புக்கொள்வார். இந்தப் பரிதாபகரமான நிலையிலிருந்து தப்பவும் "இந்துமதம்" என்ற போர்வையில் பார்ப்பனர்கள் தங்களது ஆதிக்கத்தை மீண்டும் நடத்தவும் ஒரு வழியையும், சந்தர்ப்பத்தையும எதிர் பார்த்துவந்தனர் நமது தேசியவாதிகள். இவர்களது திக்கற்ற நிலையை நன்குணர்ந்த லார்டுவெல்லிங்டன் இந்திய சட்ட சபையைக் கலைத்து மறு தேர்தல் நடத்தப் போவதாக ஒரு காடகம் நடித்தார். திக்குமுக்காடி இறக்குந்தருவாயில் தண்ணீரில் தவிக்குமொருவன் தனதெதிரில் வரும் ஒரு துரும்பைக்கூட கைப்பற்றித் தனது உயிரை நிலைக்க வைக்கப் பார்ப்பது சகஜமே. எனவே இந்த நிலையில் காந்தியார், தான் இந்த காட்டின் அரசியல் இயக்க சர்வாதிகாரி என்று தன்னைத் தானேவிளம்பரப் படுத்திக்கொண்டுதனது சட்டமறுப்பியக்கத்தை வாபீஸ் வாங்கிக்கொள்வதாகவும், சுயராஜ்யக் கட்சி என்ற பழைய பார்ப்பனக் கூட்டத்திற்கு சட்ட ரீதியாக அரசியல் கிளர்ச்சி நடத்த இடந்தருவதாகவும் வெளியிட்டுத் தனது கௌரவத்தை நிலை நிறுத்திக்கொள்ள எத்தனித்தார். சமயத்தை எதிர்பார்த்து வந்த பார்ப்பனர்களும் அகில உலக ராஜீய நாடக நடிகரான மகனம் சாஸ்திரியார் முதல், தேவதா கைங்கர்யப் பிரியர் சத்தியமூர்த்திவரையில் ஒரே கூட்டமாக திடீரெனக் கிளம்பி இந்த நாட்டை ஒரு கலக்கு கலக்க எத்தனித்துள்ளனர்.

ஆனால் நாட்டின் நிலையையும் நாட்டு மக்களுக்கு இவர்களது எத்தனங்களால் ஏற்படுத்துவதாகப் பிரகடனம் செய்யும் பரிகாரங்களையும் சமதர்மிகளாகிய நாம் நுகவனிக்குமளவில். இந்த சில்லரைச் சீர்திருத்தங்களால் எவ்விதப் பயனுமில்லையென்று கருதுவதுடன் இந்த கல்ல சந்தர்ப்பத்தை இந்தப் பிற்போக்காளரது திட்டங்களால்பொது ஜனங்களுக்கு நன்மை உண்டாவதைவிட தீமையே அதிகரிக்குமென்பதையும் பகிரங்கப் படுத்த உபயோகித்துக்கொள்ளவேண்டியது மிக அவசியமெனக் கருதுகிறோம்.

தோழர் ஜவஹர்லாலும், சர். சி. பி. யும்.

—:0:—

சர். சி. பி. ராமசாமி அய்யர் ஆதியில் ஆடிய ஆட்டங்களும், அவர் பிரபல தேசிய வாதியாக விளங்கிய கதையும், ஹோம் ரூல் கிளர்ச்சிக்காரராக விளங்கிய கதையும், பனக்கால் அரசர் அவர்களால் அடக்கி விடப்பட்ட கதையும் அகிலஉலகம் அறிந்த விஷயம்.

சர். சி. பி. சென்னை மயிலாப்பூர் வாசியாக கருதப்பட்ட போதிலும், தஞ்சை ஜில்லாவிலுள்ள திருப்பனந்தாள் மடத்து பழைய ஏஜண்ட் ராமசுவாமி அய்யரின் பௌத்திரர் என்ற முறையில் தஞ்சை ஜில்லா வாசிதான் என்பதை நாம் அறிவோம். இந்தக் கனவான் அரசியல் உலகில் எந்தப் படித்தரத்தில் வைக்கப்பட்டிருக்கிறார் என்பது, பொதுஜனங்களுக்கு நன்கு தெரியும். இப்பெருமான் காந்திஜியின் ஒத்துழையாமை முழுவேகமாய் இருந்து சட்டசபைகளுக்கு அபேக்ஷகர்களாக நிற்பதிற்குக்கூட ஆட்கள் கிடைக்காத காலத்தில், பல்லாரி ஜில்லாவின் பிரதிநிதியாக இந்தியா சட்டசபைக்குச் சென்று காந்தியைவிடவேண்டுமா வேண்டாமா என்ற பிரச்சினை ஓட்டுக்கு விடப்பட்ட காலத்தில், கடுநிலைமை வகித்தது. காந்தியாரின் தலைமை உலக மக்களின் முழுக் கவனத்தையும் பெற்ற ராவ்பகதூர் ஜமீன்தாருக்கும், தொழிலாளி ஒருவர் தலைமையில் இந்தியக்கும், முதலாளிக்கும், ஒடுக்கப்பட்டவனுக்கும் உயர் ஜாதிக்காரனுக்கும், ஒரே சமயத்தில் ஒத்தாசை செய்ய முயல்கிறது. தற்கால பொருளாதார, சமூக ஸ்தாபனங்களை மாற்றியமைக்காது, விவசாயிக்கும், தொழிலாளிக்கும் ஒடுக்கப்பட்டவனுக்கும் நீதி செலுத்த முடியுமென்று காந்தியார் கனவு காண்கிறார். ஏன்? அவர் சீர்திருத்தவாதி; சமதர்மியல்ல.

காந்தியாரின் சீர்திருத்தம் பலிக்காது. அவரைப்போல் முயன்ற அநேகர் முடிவில் தோல்வியடைந்ததாகச் சரித்திரம் கூறுகிறது. எல்லோருக்கும் கல்ல பிள்ளையாக நடப்பது உலகத்தில் முடியாத காரியம். காந்தியார் முடியாத காரியத்தை முடிக்க முயன்றுகாலத்தை வியர்த்த மாக்குகிறார். 'எலியையும் பூனையையும்' ஆட்டுக்குட்டியையும் ஓநாயையும், கவுளையும் பாம்பையும் ஒரே பொழுதில் ஆதரிக்க முடியாது. முதலாளி, ஜமீன்தார், உயர்ஜாதிக் காரர்களைப் பூரணமாய் ஆமோதிக்கவும் காந்தியாருக்கு முடியவில்லை. அவர்களை எதிர்த்து உழைப்பாளிகளோடு சேர்ந்து கொள்ளவும் காந்தியாருக்குத் துணிச்சல் இல்லை. முதலாளிக்கும் தொழிலாளிக்கும் இடையில் ஊஞ்சலாடுகிறார். வாலிபர்களே! சீர்திருத்தக்காரரின் மாய வலையிலிருந்து வெளிவந்து, சமதர்மத்தொண்டாற்றுங்கள்.

சீர்திருத்தக் காந்தி.

சமரஸமே காந்தியாரின் பாலிஸி. காந்தியாரை சர்வாதிகாரியாகக் கொண்டு காங்கிரஸ் பெருமை யடித்துக்கொண்டி

மகாத்மாவின் லாபப் பங்குத் திட்டம்.

இறுதியாக எதுவும் முடிவு செய்யப்படவில்லைபா.

தொழிற்சங்க காரியதரிசி தெரிவிப்பதாவது:- மகாத்மா கூறியுள்ள லாபப் பங்குத் திட்டம் ஆலோசனையில் இருந்து வந்தபோதிலும் இன்னும் திட்டமான திட்டம் எதுவும் இறுதியாக நிர்ணயக்கப்பட்டில்லை. வேலை நிறுத்தம் மேற்பட்டிருந்த கமர்ஷியல் மில்லில் இன்று புதிய ஆட்களைக்கொண்டு வேலை துவக்கப்பட்டது. அசம்பாவிதங்களை தடுப்பதற்காக போலீசார் அங்கே குவில் நிற்கப்பட்டிருந்தனர்.

திருச்சி தேவருக்கு துணை.

திருச்சி முனிசிபல் சபைத் தலைவரும், நீலகிரி முனிசிபல் சபைத் தலைவரும் இன்று சர்க்கார் உத்திரவை சந்தித்துஇருக்கிறார்கள். நீலகிரி முனிசிபல் சபைத் தலைவரை அவர் என்? ராஜினாமா செய்யக் கூடாதென்பதற்கு சரியான காரணம் காட்டுமாறு நமது மாகாண முதல் மந்திரியாரை கனம் பொப்பிலி கேட்டு இருக்கிறார். இவ் விதம் கேட்பது தப்பு என்று 'ஹிந்து' கூட கோபித்துக் கொள்கிறது. இதை போன்று தான் திருச்சி நகர சபை தலைவரை கேட்டதும் தப்பு என்று நாம் சொல்கிறோம்.

திருச்சி, நீலகிரி இவ்விரண்டு நகர சபை தலைவர்களையும நாமும் தமிழ் நாட்டாரும் நன்கு அறிவோம். இவர்களை இவ் விதம் விலக்கக்காரணம் கேட்பதும் நியாயமானது என்று நமக்கு தோன்றவில்லை. நியாயமல்ல என் பதுடன் இவ்விரு உத்திரவுகளும் மே. த. க. தலையீட்டினாலாவது உடனே வாப்பீஸ் வாங்கிக்கொள்ளப்படு மென்று நம்புகிறோம். மே. த. க. முன்பு மதுரை ஜில்லா போர்டில் ஜாடையாக புத்தி மதி கூறி சமரசம் உண்டாக்கினது போல் இதனையும் செய்யுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

நடப்பு

முனிசிபல் சபை சம்பந்தமாக கோர்டுகளில் வந்த வழக்குகள் பலதையும், முனிசிபல் சபை நடவடிக்கை காலங்களில் அங்கத்தினர்களுக்குள் நடக்கும் வாக்கு வாதங்களையும் தொடர்ந்து படிப்பவர்கள், திருச்சி நீலகிரி இம் முனிசிபால்டிகளைப்பற்றி தவராக எண்ண மாட்டார்கள்.

முனிசிபல் மோட்டார்களுக்கு எண்ணை வாங்கியதாக கணக்கு காட்டிவிட்டு, காலி பெட்ரோல் டின், வாங்கிய எண்ணை அளவுக்கு இல்லையே என்று கேட்கப்பட்ட சபைத் தலைவர், முனிசிபல் எருக்கள் முழுதையும் தன் வீட்டு நிலத்தில் கொட்டி விட்டு, குப்பை கூளம் ஏன் குத்தகைக்கு விடக் கூடாது என்று கேட்கப்பட்ட காலத்தில் கையை விரித்த முனிசிபல் சபைத் தலைவர்! முனிசிபல் செலவின்படி சோமெனல் கை யொப்பமிட்டு கிழிக்கப்பட்டு செக்கானது பேங்கில் மாற்றப்பட்டு அச் செலவினம் எங்குபோக வேண்டுமோ, அங்கு போகாத தால், பாங்கிகாரன் முனிசிபல் சபைக்கு லாயர் நோட்டீஸ் கொடுத்தும் அதைப்பற்றி கேள்வி கேட்டதும், பேந்த பேந்த விழித்த தலைவர். இதைப்போன்ற வேடிக்கை விநோத நகர சபை தலைவர்கள் நமது மாகாண முனிபால்டிகளில் பலர் இருந்தார்கள்; இப்பவும் இருக்கிறார்கள். இவர்களில் எந்த பிரிவையும் சேர்ந்தவர்கள் திருச்சி நீலகிரி நகர சபைத்தலைவர்கள் அல்ல. அவ் விதம் சர்க்கார் உத்திரவிலும் இல்லை. ஸ்தல அதிகாரிக்கும் ஸ்தல ஸ்தாபன அதிகாரிக்கும் வந்த சண்டையின் சப்தம் போலவே, உத்திரவின் தொனி தொனிக்கிறது. மிக அற்பமான பிரச்சினையில் முதலில் வருதகம் தோன்ற ஆரம்பித்திருக்கிறது.

கண்ணீர் சப்ளை செய்ய வேண்டிய ஏற்பாடு எதெது, ஏற்ற குழாய் வழியாக நகரத்துக்குள் தண்ணீர் வந்தது, இஞ்சினீர், சூபரவைசர் இவர்களில் யார், யார், வேலை பார்க்கலாம், என்பது போன்ற மிக அற்பமான பிரச்சினையிலிருந்துபிறந்த புழுவானது, நாக்கு பூச்சியாகி, பல்லியாகி, ஓணானாகி, உடும்பாகி, பாம்பு ஆகி நல்ல பாம்பு ஆச்சப்பா என்ற கதையாக சேர்மெனை ஏன் விலக்கக் கூடாது என்று ஜி. ஓ. கேட்கிறது.

பல்லியாய் இருக்கும்போது, அல்லது ஓணானாக மாறினபோது நமது கனம் முதல் மந்திரியும் முனிசிபல்சபை முக்கியஸ்தர்களும் சந்தித்து,கலந்து பேசி இருந்தால், இன்று பாம்பாக மாற இடமிருந்திருந்திருக்க முடியாமல் போயிருக்கும். பேனது போச்சு, சென்னை சர்க்கார் முக்கியஸ்தர்களும் சட்டப்படி தான் போவதாக எண்ணி நடந்து இருக்கிறார்கள். இரு நகர சபை தலைவர்களும் சட்ட மீறுதலுக்கு ஆளாகாது தான் நடந்து இருக்கிறார்கள். முடிவிலோ சர்க்கார் அவர்களுக்குள்ள அதிகாரோரணையில் எதேச்சாதிபமாக நடந்து விட்டார்கள்.

இதை அவ் விரு நகர மகாஜனங்களும், தமிழ் நாட்டில், அவ் விரு சபை தலைவர்களின் விரோதிகளும் கூட ஒப்புக்கொள்கிறார்கள். இப்பய முருத்தல் அனாவசியம். இனியும் இக் கடுமையான நிலை மிகக் கடுமையாகக் கூடாது என்று ஆசைப்படுவதுடன் விரைவில் நல்ல செய்தி கிட்டு மென்பதை எதிர்பார்க்கிறோம்!

பார்ப்பான் தான் உத்தியோகத்துக்கு லாயக்கானவன், பார்பனகவுன்சிலர் ஜகாவாக இருக்க கூடாது, எப்படியும் பார்ப்பான் அண்டிக் கெடுப்பான் என்று சுயமரியாதைக்காரன் சொல்லும் போது சீறும் மேதாவிகளே மு. தலைவர்களே! இச் சம்பவங்களை உங்களுக்காகவே எடுத்துக் காட்டுகிறோம். இவ் விரு தலைவர்கள் மு. ச. இருந்து விலகினாலும் இவர்கள் நகரத்துக்கு இவர்கள் தான் தலைவர்கள் என்பதை சர். சி. பி. யோ, சிங்கமய்யங்காரோ, மூர்த்தியோ, மறுக்க முடியாது. மறுத்து வால் ஆட்ட முடியாது. என்றாலும், பார்ப்பனீயம்எங்கெந்த வித மெல்லாம், அல்லாதாரை அல்லல் படுத்துகிறது என்று பார்த்தீர்களா?

தலைவரே! உமது செய்கை நீயாயமானது, நீவிர் தஞ்சையில் செய்த தியாகத்தக்கு இன்று பலன் அனுபவிக்கிறீர். நல்ல பாம்புக்கு பால் வார்த்தாலும், அது நல்ல விஷத்தைத் தான் கக்கும். இதை கண்டு திடுக்கிடுதல் வீரன் செய்கையன்று உமது உதவியையும், தூணையையும், தொடிக்குள் மறந்து உமது நியாயமான செய்கை மீது குற்றம் கற்பித்து விடும் படி முதன் மந்திரியை தூண்டியது எது? அவரின் செல்வச் செருக்குர், அர்ப்பனுக்கு வந்த வாழ்வுமா? அல்ல. திருச்சியில் உள்ள சில ஐயர், ஐயங்கார், இவர்களின் உறவுஅவசிய மென்று கனம் மந்திரியின் எண்ணமே, உம்மைவன் ராஜினாமா செய்யக்கூடாதுஎன்று கேட்கச்செய்தது வாஸ்தவம்.தேவரே தீவிர தலை நிமிர்த்து உம்மை இழிவு படுத்த எண்ணிய மந்திரியை, மாஜி மந்திரியாக ஆகும்படி செய்ய முயல்வீரா? அது உம்மால் முடியாததா?

மே தினமும் தொழிலாளியும்:

(காம்ரேட்)

பசிக்கிறவனுக்கு ஆகாரம் தேவை. தாகமெடுக்கிறவனுக்கு பானம் அவசியம். ஒஷ்ட நிஷ்டூரத்தில் அகப்பட்டு கண்கலங்குகிறவனுக்குத்தான் கஷ்ட நிவாரணம் உடனடியாகவேண்டும். இன்றை யதொழிலாளர் உலகம் இலலாமைக்கு இரையாகி நெருப்பில் விழுந்த புழு போல் துடிதுடித்துக்கொண்டிருப்பது மனித வர்க்கத்திற்கேமானக்கேடு. தொழிலாளர்கவலைக்கடலிலிருந்து கரையேறுவது அவசியமும் அவசரமுமாகும்.

மேதினம் தொழிலாளர் கொண்டாடுகிறநாள். அன்று உலக முழுவதும் தொழிலாளிகள் தங்கள் ஒற்றுமையையும், வலிமை மையையும்காட்டுகின்றார்கள். இந்த நெருக்கடியான சந்தர்ப்பத்தில் பொதுவாக இந்தியத்தொழிலாளிகளும் சிறப்பாக தமிழ்நாட்டிலுள்ள தொழிலாளிகளும் தங்கள் ஒற்றுமையைக் காட்டக்கடமைப் பட்டிருக்கிறார்கள்.

மனிதர் கூடிவாழுவார். பலஹீனமான தொழிலாளரோ அவசியம் ஐக்யப்பட்டு வாழ்ந்து தீரவேண்டிய நிர்பந்தத்திலிருக்கிறார்கள். தேனீக்களும், சிற்றெறும்புகளும் சேர்ந்து வாழ்ந்து, எதிரிகளைத் தோற்கடித்து சமதர்மராஜ்யத்தில் வாழ்ந்து வருகின்றன. மிருகங்களிலும் பறவைகளிலும் பலகூடி வாழ்ந்து வருகின்றன. தொழிலாளிகளும் ஒன்று பட்டு முதலாளிகளின் கொடுமை களிலிருந்து விடுதலைபெற வேண்டியவர்களாயிருக்கிறார்கள்.

"ஒற்றுமை வலிமையாம்"
"ஒன்றுபட்டாலுண்டு வாழ்வு—நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவருக்கும தாழ்வு" சமதர்மிகளே! தொழிலாளர்களே!! மே தினத்தை தொழிவாளர் ஒற்றுமை நாளாகக் கொண்டாடுங்கள்.

விபசாரம் விவாகரத்து.

கல்வி இலாக்கா மாஜி உத்தியோகவஸ்தர் ஒருவரின், 22-வயது மனைவி ஒரு 80-வயது கிழ வேலைக்காரனை அழைத்துக்கொண்டு ஓர்பங்களா பார்க்க சென்றாள். அங்கு இளம்மனைவிக்கு காதல் உணர்ச்சி உண்டாயிற்றும், கோச்சு மெனுக இருந்த அக்கிழவனும் இதற்கு உடன் பட்டானும். பிறகு அந்த பங்களாவிலேயே இவர்கள் வசித்து வந்தார்களாம். கிழவனுக்கு ஓர் தனிப் படுக்கை அரை அவளால் தயாரித்துக் கொடுக்கப்பட்டு குமரியும், கிழவனும் கொண்டாட்ட மடித்து வந்தார்களாம். இப்பெண்ணின் புருடன் தன் மனைவியின் நடத்தைக்காக விவாக ரத்து செய்ய உரிமை கோரினர். நீதிபதியும் அவளை விவாகரத்து செய்ய உத்திரவிட்டார். (தா-ம்)

கடவுளும் பகுத்தறிவும்.

(கேந்ளுப்பு தோழர் I. M. இப்ருஹீம்)

உலகத்தில் கடவுளால் (ஆண்டவனால், அல்லா(ஹ்)வால்) மக்களுக்கு ஆகின நம் ஆகப்போவதும் ஒன்றுமில்லை. கடவுளுக்கு ஆகவேண்டியவைகளும் மக்களாலேயே ஆகவேண்டிஇருக்கும்போது, கடவுளால் மக்களுக்கு ஆவதென்ன? மக்களுக்கு ஆகவேண்டிய தெல்லாம் மக்களாலேயேஆகவேண்டும். ஏதொன்றுக்கு மக்கள்கடவுளைஎதிர்ப்பார்ப்பது இறுதியில் ஏமாற்றத்தைக் கொடுக்கும் ஏமாற்றத்தைக் கொடுத்தன. கடவுள்என்னும் சொல்லால் உலகத்திற்கு நன்மைகளை விடதீமைகளே அதிகம் ஏற்பட்டன கடவுள் என்னும் சொல்லால் உலகம் இதுவரைக்கும் சீர்திருத்தமோ முன்னேற்றமோ அடையப் போவதில்லை. ஆனால் இச்சொல்லால்உலகம் பின்னேற்றம் அடையப் போவது மாத்திரம் திண்ணம். கடவுள் நம்பிக்கையால் மக்கள் யோக்கியர்களாகிவிடவில்லை. கடவுளாலும் மக்களை யோக்கியர்களாக்க முடியவில்லை. பஞ்சமாபாதகங்களை செய்பவர்கள் எல்லாம் கடவுள் நம்பிக்கை உள்ளவர்கள்தான். "கடவுளாலும்" பஞ்சமாபாதகங்களைத் தடுக்க முடியவில்லை. ஆஸ்திகத் தோழர்களால் நம்பி புகழ்ந்துவணங்கிவரும் கடவுள் ஆண்டவன் அல்லாஹ் என்பதெல்லாம், மக்கள் பயத்தாலும் (முக்கியமாக மரணபயத்தால்) இயற்கை வன்மையின் பால்கொண்ட ஆச்சரியத்தாலும், அறியாமையாலும் "இம்மாபெரும் பிரபஞ்சம் அமைவதற்கு நம்மால் பார்க்கமுடியாத உணரமுடியாத அறிவிற்கு தட்டுப்படாத உள்ளதனதக்கடந்த ஒரு பிரபஞ்ச கர்தா இருக்கவேண்டும்" என்று அனுமானித்த அனுமானங்களாலும், எற்பட்ட கற்பனைச்சொல்களாக இருக்கவேண்டுமேயன்றி,பிரத்தியட்சமாக உலகில் யாராவது கடவுள் என்பதான்றை பார்த்ததுமில்லை, அறிந்ததுமில்லை, அக்"கடவுள்" என்பதுடன் சம்பாஷித்ததுமில்லை என்பது வெள்ளிடைமலை.[ஆஸ்திகத் தோழர்களே! உங்களுடைய அபிப்பிராயப்படி உள்ளத்தைக்கடந்த ஒரு கர்தாவோ அல்லது பல கர்த்தாக்களோ இருந்தால இருந்து தொலையட்டும்; அதனால் மக்களுக்கு ஆகின நன்மையும் இனி மேல ஆகப்போகும் நன்மையும் ஒன்றுமில்லை- "அது உள்ளத்தைக்கடந்தது" என்பதனால் "கடவுள்" என்பதுஉங்களுக்கும்தரியொது நமக்கும் தெரியாது என்பதுதான் அர்த்தம்.எனவே தெரியாத ஒன்றை (கடவுளை)த்தெரியாது என்று உண்மையைக் கூறுவதுடன் அதற்கும் (கடவுளுக்கும்) மக்களுக்கும் இஞ்சிற்றேனும் சம்பந்தம் வைத்துக்கொள்ளாமல் இருப்பதுதான் நியாயம்]

உலகத்தில் கோடிகணக்கான மக்கள் உண்ணப்போதிய உணவும் உடுக்கப்போதிய ஆடையும், வசிக்க சுகதாரமான வீடும், நோயை அகற்ற வைத்தியமும், அறிவை விருத்திபண்ணும் கல்வியும் இல்லாமல் இருக்கும் மக்களின் இம்மாபெரும் குறைபாட்டை சிறிதும் கவனியாமல் தேசங்கள்தோறும் பலகோடி ரூபாய்களை மக்களுக்கு உபயோகமற்ற வழியில் விரையம்செய்து வணக்கஸ்தலங்களைக்கட்டி கடவுள் என்னும் கற்பனைச்சொல்லை வணங்குவதும் தனது தேவையை குறைபாட்டை நோயை நிவர்த்திபண்ணிக்கொள்வதற்கு கடவுள் என்னும் கற்பனைச்சொல்லிடத்தில் வேண்டுதல் புரிவதும்; கோடிக்கணக்கான ரூபாய்களைச் சிலவுசெய்து உற்சவங்கள், திருவிழாக்கள், சடங்குகள் செய்து கடவுளின் தயவைபெற முயல்வதும்; வருடாவருடம் பலகோடி ரூபாய்களை வியர்த்தமான வழியில் விரையம்பண்ணி ஹஜ்யாத்திரை செய்து பாவங்களைப் போக்கி பரிசுத்தவான்களாகிக்கொள்ள முயல்வதும் பகுத்தறிவைக்கொண்டு பரிசீலனைப்பண்ணிப் பார்க்காமல் செய்யும் மூடச்செய்கைகளேயன்றி மக்களை முன்னேற்றும் செய்கைகளல்ல.

கடவுளும் கடவுள் சம்மந்தப்பட்டவைகளும் மக்களை ஒருக்காலும் முன்னேற்றாது. பகுத்தறிவொன்றுதான் மனித சமூகத்தை முன்னேற்றும். பஞ்சமாபாதகங்களைப் பகுத்தறிவாலும் சமதர்மத்தாலும் தான் அகற்றமுடியும். மக்களிடத்தில் பகுத்தறிவுக்கல்வியை புகுத்திவிடுவோமேயாகில் கெட்டதைத் தள்ளி நல்லதையும் தூர்க்குணத்தைநீக்கியும்நற்குணதையும் எடுத்து நடக்கத்தெரிந்து கொள்வார்கள். இதற்கு"கடவுளோ" "கடவுளின் அருளோ" "கடவுளின் தூதரோ" தேவையில்லையென்பது தான் கடவுளை (ஆண்டவனை, அல்லாஹ்வை) ஆராய்ந்த நமது முடிவு. எனவே அறியகாலத்தை வீணேபோக்கி இந்த உபயோகமற்ற கற்பனைச் சொல்லாகிய கடவுளை ஆராய்ச்சி செய்வது வீண்வேலையென்றுகருதுகிறேன். எனினும் பெரும்பான்மையினர்களாகிய நமது சகோதர ஆஸ்திகத் தோழர்களின் கடவுள் வைராக்கியத்திற்காக வேண்டியும்எல்லோரும் இன்புற்றிருக்கும் நமது முன்னேற்றச்சமதர்மத்தேரை செல்ல விடாமல் கடவுள் என்னும் முட்டுக்கட்டையைகொண்டுவந்து குறுக்கே போட்டுத்தடுப்பதனாலும் ஆஸ்திகர்களின் கடவுள் நம்பிக்கையின் யோக்கியதையைப்பற்றியும் கடவுளின் ஊழல்களைப்பற்றியும் எடுத்துச்சொல்ல வேண்டியவனாயிருக்கிறேன்.

"கடவுள்" என்பது ஒவ்வொரு ஆஸ்திகத்தோழரின் உள்ளதிலும் ஆணிவேர் போன்று பதிந்து கிடக்கின்றன. கடவுளைப்பற்றிச் சில பகுத்தறிவுக்கேள்விகளை கேட்டுவிட்டால் போதும் ஆஸ்திகத்தோழர்களுக்கு ஆவேசம் வந்து விடுகிறது. கடவுளுக்காக வேண்டி மனிதனை மனிதன் என்பதைக்கூட மறந்து விடுகிறார்கள்.கடவுளுக்காக வேண்டி மனிதனுக்கு என்ன கொடுமையானாலும் சரி,செய்யத்தயாராகி விடுகிறார்கள். எனவே இத்தகைய ஆஸ்திகத்தோழர்களின் கடவுள் பித்துக்காகவேண்டி அவர்களுடைய அறிவிற்குக் கட்டுப்படக்கூடிய முறையில் கடவுளைப்பற்றி எடுத்துச்சொல்லவேண்டும்.

கடவுள் என்பதுதான் இன்றைய உலகில் இருக்கும் மதங்கள் எல்லாவற்றிற்கும் மூலகாரணம். எல்லா மதங்களிலும்—மதங்களிலுள்ள எல்லா பக்கங்களிலும் "கடவுளின் திருவிளையாடல்"களைப் பற்றியும் "கடவுளின் வல்லமை"களைப்பற்றியும் "கடவுளின் குணநிசயங்களை"ப் பற்றியும்; இன்னும் "மறு உலக"த்திற்கு (கற்பனை உலகத்திற்கு) போகும் மார்க்கங்களையும்; "ஆத்துமா"க்களைப் பக்குவப்படுத்தக் கூடிய மூலகாரணங்களைப்பற்றியும்; "நரகலோக" கத்தில் அனுபவிக்கப்போகும் பயங்கரமான சித்திரவதைகளைப்பற்றியும், மோட்சலோகத்தில் அனுபவிக்கப்போகும் அழியாஇன்பங்களைப்பற்றியும், வர்ணிக்கப்பட்டிருக்கின்றனவேயன்றி, நாம் வாழும் இத்தப் பிரத்தியட்ச உலகில் மனித வாழ்க்கைக்கு அவசியமான பொருளாதாரத்தை விருத்திபண்ணக்கூடிய முறைகளைப்பற்றியேனும்,கைத் தொழில் முறைகளைப் பற்றியேனும், மக்களுக்கு ஏற்படும் கொடிய நோய்களைத் தடுக்கக்கூடிய வைத்திய முறைகளைப்பற்றியேனும் பஞ்சமாபாதகங்களைத் தடுக்கக்கூடிய அரசியலைப்பற்றியேனும், இன்றைய ஜனப் பெருக்கத்திற்குப் பொருத்தமான ஒரு திட்டத்தைப்பற்றியேனும் தேசாபிமானம், பாஷாபிமானம் ஜாதியபிமானம், மாதாபிமானம் முதலிய குறுகிய அபிமானங்களால் கொடிய யுத்தங்களேற்பட்டு கோடிக்கணக்கான மக்கள்பாழாகாமல்,அகில உலகலக்களும் ஒன்றுபோல் மனுஷாபிமானத்துடன் வாழக்கூடிய பாந்த நோக்கங்கொண்ட ஒரு சிறந்த கொள்கையைப்பற்றியேனும் மதங்களில் சொல்லப்பட்டில்லை.

இத்தகைய மக்களுக்கு அவசியமான விஷயங்களைப்பற்றியேனும் ஒன்றும்கூறியில்லாத-இப்பிரத்தியட்ச உலக வாழ்க்கைக்குத் தேவைப்படாத கற்பன உலகவாழ்க்கையைப்பற்றி வர்ணிக்கப்பட்டிருந்தும் மதங்கள் மக்களுக்கு எதற்கு? இத்தகைய குறுகிய நோக்கங்கொண்ட மதங்கள் விரிந்த உலகில் வாழும் பரந்த நோக்கங்கொண்ட நமக்கு (மக்களுக்கு) பொருந்தாதென்று சொல்லுவதைச் சிறிதும் சிந்தித்துப் பார்க்காமல் ஆஸ்திகத் தோழர்கள் ஏதோ அபாயம் வந்துவிட்டதாகவும், உலகமே மூழ்கிவிடப் போவதாகவும் கூப்பாடு போடுகிறார்கள்.

ஆதிகாலத்திலிருந்து ஆஸ்திகர்களின் இத்தியாதி கடவுள் பித்துதான் உலக முன்னேற்றத்தை இவ்வளவு காலத்திற்குத் தாமதப்படுத்தியது.கடவுள்"ஆண்டவன்அல்லா(ஹ்) என்னும் அகம்பாவம் பிடித்த சொல் உலகில் எற்படாமலிருந்திருக்குமேயானால், இன்றைய உலகம் அடைந்திருக்கும் கவீன நாகரீகங்களை ஆயிரக்கணக்கான வருடங்களுக்கு முன்னமேயே நமது மூதாதைகள் அடைந்திருப்பார்கள். இன்றைய நாகரீகம் இன்றைக்கு இருப்பதைவிட ஆயிரஆயிரமடங்கு மேலோங்கி தற்காலம் நாம் ப்ர்க்கும் கவீனக் காட்சிகளை விட 10000 கணக்கான கவீனக் காட்சிகளைக் கண்டு களித்துக்கொண்டிருப்போம். இப்பொழுது ரஷ்யாவில் நடைமுறையில் இருக்கும் பொதுவுடமையாட்சி 1000 கணக்கான வருடங்களுக்கு முன்னமேயே உலகமுழுதும் எற்பட்டிருக்கும்.இவ்வளவு முன்னேற்றக் கொள்கைகளையும் அறிஞர்களின் ஆராய்ச்சிகளையும் தடைப்படுத்தியது கடவுள் என்னும் அகம்பாவம் பிடித்த பதந்தான். ஒருவர் இருவர் ஆராய்ச்சிபண்ணிப் புதிய விஷயங்களை வெளியாக்கினால்போதும் "கடவுள் மதத்தில் சொல்லியிருப்பதற்கு விரோதமாயிருக்கிறது. இது மதத்துவேஷம், கடவுள் துவேஷம் இது எங்கள் கடவுளின் திருவாக்கிற்கு விரோதமாயிருக்கிறதென்று" சொல்லி கடவுள் பித்தர்கள் ஆராய்ச்சியாளர்களைக் கழுவேற்றியும் தீயிலிட்டுக்கொழுத்தியும், கட்டிவைத்துக் கல்லெறிந்தும் நாட்டைவிட்டுத் துரத்தியும் தண்டு தண்டாக வெட்டியுமிருக்கிறார்கள். இத்தியாதி கடவுள் பித்தர்களின் கொடிய தடைகளுக்குப் பயந்து ஆராய்ச்சியாளர்கள் அவர்களுடைய உள்ளத்திலெழுந்த மாண்புமிக்க அறிய எழுச்சிகளைப் பிரசுரிக்கப்படுத்த முடியாமல் தவித்தார்கள். கடவுள் பித்தர்களின் கொடிய தண்டனைகளுக்குப் பயந்து வெளியிட முடியாமையினால் ஆராய்ச்சியாளர்களுடைய உள்ளத்திலேயே எத்தனையோ அரியபெரிய எழுச்சிகளெல்லாம் செத்துமடிந்தன. அராங்கங்களெல்லாம் கடவுள் பித்தர்களின் கையிலிருக்கும்போது ஆராய்ச்சியாளர்கள் என்ன செய்வது எப்படி வெளியில் சொல்வது சொன்னால் சித்திரவதை கிடைப்பது திண்ணம், அவ்வாறிருந்தும் ஒரு சில ஆராய்ச்சியாளர்கள் அவர்களு

தொடர்ச்சி 13ம் பக்கம்பார்க்க

ருஷ்ய யாத்திரை.

வண்டி எல்சின்கி என்ற இடத்திலிருந்து 14 மணிநேரத்தில் வெகுதூரம் கடந்தபின் லெனின் கிராடில் தங்கியது. 1933ம் வருடம் ஜனவரி மாதமாகையால், அந்நாட்காலேயில் குளிர் அதிகமாகவே இருந்தது. பனி இடை விடாமற் படிக்குபெய் தெகொண்டே இருந்தது பசும் புற்கள்யாவும் பூமியில் தலை யெடுக்க வொண்ணுமல் பனியினால் நாசமாக்கப்பட்டன. நிலக்களும், கட்டங்களும், குடிசைகளும், கூரைகளும், பச்சை மரங்களும், பனியினால் நனைந்து இருந்தன. அந்நாட்காலேயில் மிக்க கடுமையான குளிர் இருந்ததுடன் ஒவ்வொருவரும் தன்னுடைய வாழ்நாட்கள் முழுவதும் மறக்கமுடியாதவாறு இக்காலேயின் குளிரை உணர்ந்திருத்தல் வேண்டும். தேதோஷ்ண நிலமையின் அளவு 0 டிகிரி செண்டிகிரேடுக்கு 20 டிகிரி குறைவாக இருந்தது. வண்டியில் இருந்தவர்கள் சிலநிமிடங்களுக்குள் இரங்கி விட்டனர். நான் இருந்த இரயில் வண்டியில் ஓர் ஆங்கிலம் பேசத்தெரிந்தவர் ஒருவர் இருந்தார். நான் அவரை உன்நாட்டு சுற்றும் பிரயாணியின் மனிதனைக்கண்டு பிடிப்பதில்எனக்கு உதவி புரியுமாறு பறிந்து கேட்டேன். அம்மனிதன் ஸ்டேட்டுரிஸ்டு கம்பெனியின் ஆணையின்மீது என்னை பாரைவயிட வேண்டியிருந்தது. அந்த கனவான் தன்னுடைய வேலைக்காரனை என்னுடைய சாமான்களை கொண்டுவருமாறு ஏவினார். கோபன் ஆகனில் உன்நாட்டு சுற்றுப்பிரயாணியினால் எனக்கு அறிவிக்கப்பட்ட ஓர் மனிதனை அக்கனவான் தேடித்திரிந்தார். நான் ரஷியாவிற்கு இந்த இடத்திற்குத்தான் என்னுடையசாமான்களோடு புரப்பட்டு விட்டேன். அம்மனிதன் எனக்காக ஸ்டேஷனில் வந்து காத்துக்கொண்டு இருப்பார் என்பதுநிச்சயம். நாங்கள் சுமார் 5 நிமிடம் வரையில் காத்துகொண்டு இருந்தோம். உஷ்ணமேசசத்திலிருந்து வந்த ஓர் மனிதன இந்த 5 நிமிடத்திலேயே பனியினால் ஒடுக்கிவிடுவான், என்னுடைய கைகளெல்லாம் வலியெடுத்துக்கொண்டன, கால் விரல்கள் மரத்துவிட்டன, காதுகள் சிவந்த நிறமாகிவிட்டன, கைகுட்டையும் நனைந்துவிட்டது, மூக்கின் துவாரங்கள் ஊதி விட்டன. இவைகள்யாவும் எனகு அதிக கஷ்டமாக இருந்தன, நான்அப்பொழுது திக்கற்றவனாய் இருந்தேன். நான் அந்தேசசதது பாஷை ரஷியபாஷையைபேசமுடியாமல்இருந்தாலும் எனக்கு அதனால ஓர் வித இடையூறும் கிடையாது. இதரதேசத்திற்கும் இந்த தேசதற்கும் அமைந்துள்ள சட்டங்கள் மிகவும வித்தியாசப்பட்டதின் காரணமான எண்ணாத்தினாலும்,பணக்காரர்களுகு ஏற்பட்ட துர்அதிர்ஷ்டத்தினாலும இந் நாட்டிலுள்ள பயங்கர இயகசதின் தீவிரத்தனாலும் நான் ஓர் வாடகை மோட்டரை யாவது அல்லது ஓர் கூலியாளையாவது கூப்பிட அருகதையற்றவனாக இருந்தேன். கூலியாளுக்குஎவ்வளவு கொடுப்பதென்பது யாருக்கு தெரியும்? நான் அவ்வாறு அவனுக்கு வெளிப்படையாய் கூலிகொடுத்து இருப்பேனாகில் சமதர்ம இராஜ்ஜியத்தினால் என்னை குற்றவாளியென்றுகருதியிருப்பார்கள். ஆனால் அந்தமிக்க கடுமையானகுளிரில் நான் என்ன செய்யமுடியும? நான் ஸ்டேஷன் மேடையின்மீது இங்குமங்குமாய் உலாவிக்கொண்டு இருந்தேன். என்னுடைய நண்பன் உன்நாட்டு சுற்றுப் பிரயாணியை காணுமாறு சென்றார். நான் உலாவியதன் நிமித்தம் எனது திரேகத்தில்சற்று உஷ்ணம் உண்டானதென்று உணர்ந்தேன். நான் ரஷியர்களின் தகுதியற்ற முறைமையையும், இராஜாங்கஎற்பாட்டின் கீழ்வரப்பட்ட இந்நாட்டிற்கு முதல்தடவை வரும் ஓர் மனிதனுக்கு இத்தகைய குளிர்காலத்தின் வரவேற்பையும் குறைகூறிக்கொண்டு இருந்தேன்

ஓர் இளங்கண்ணிகை என் எதிரே வந்து "நீங்கள் கோபன்கேகனிலிருந்து வருகின்றீரகளா? என்றும், நீங்கள் தான் உன்நாட்டுசுற்றுப்பிரயாணியின் ஏஜண்டா?" என்றும் மிக்க இனிமையாக ஆங்கிலத்தில்கேட்டாள். "ஆமாம்"என்று நான்கூறியதும், கொஞ்சநாழிகைகழித்துவந்தமைக்கு மன்னிப்பு செய்துகொள்ளாமல் ஸ்டேஷன் வெளியேகாத்துக் கொண்டு இருந்த கார் இருக்கும் இடத்திற்கு என்னுடைய சாமான்களை எடுத்து செல்லுமாறு ஓர் கூலியாளைகேட்டாள். அவளதுவருகை எனக்கு மத்த உற்சாகமூட்டியது. எனக்கு நானே தேருதலடைந்தேன். நாங்கள் இருவரும் மோட்டார் தங்கிய இடத்திற்கு சென்றோம் அந்தகூலி ஆளுக்கு டணம் ஒன்றும் கொடுக்காமல் ஓர் சீட்டு கொடுக்கப்பட்டது. கார் அந்த இடத்தைவிட்டு நகர்ந்ததும் நாங்கள் இருவரும் பழைய நண்பர்கள் போல் சம்பாஷிக்க ஆரம்பித்தோம். நாங்கள் இருவரும் இவ்வாறு ஒருவருக்கொருவர் சம்பாஷித்துகொண்டு இருப்பதையும் சிரிததுக்கொண்டு இருப்பதையும் யாராவது ஒருவர் பார்ததிருப்பாராகில் நாங்கள் சில நிமிடங்களுக்கு முன்னால் தான் சந்தித்தோமென்று அவர் நம்பியிருக்க முடியாது. அவளது கருத்துகள் யாவும் என்னை மிகவும் உற்சாகமூட்டியது. நான் என்னுடைய மனதில் அன்புதும்புமாறு நினைத்துக்கொண்டு இருந்த ரஷியா தேசதின் படத்தை அவள் வெளியே எடுத்தாள். ஐரோப்பாகண்டத்தில் நாகரீகமடைந்த தேசங்களில் புலப்பட்ட மனிதரைப்போலவே ரஷியதேசத்தாரும் புலப்பட்டார்கள். நான்ஸ்டேஷனில் போதுமான கூலிக்கார்கள் கிடையாது என்று அவளிடத்தில் கூறினேன். அவள் புன்சிறிப்புடன் "ஆமாம் இக்காலத்தில் ஒவ்வொருவரும் தத்தம் சாமான்களை தாமேதூக்கிசெல்லுகின்றார்கள். இப்பொழுதுஒருவர் பெட்டியை தூக்கிசெல்லுவதற்காக ஓர் கூலியை வேண்டும்படியான பணக்காரர்கள் ஒருவரும் கிடையாது" என்று பதிலளித்தாள். "ஆனால் ஒருகனமுள்ள சாமான் இருக்குமாகில் ஓர்கூலிதேவையாய் இருக்குமே" என்று கூறினேன். அவள் "ஆமாம், அதற்காக சிலர் இருக்கின்றனர். எங்களுக்கு தொழிற்சாலைகளிலும், நிலங்களிலும் வேலைசெய்ய அநேக தொழிலாளிகள் வேண்டியிருப்பதினால் இத்தகையவேலைக்கு நாங்கள் ஓர் சிறுவரை அனுப்புகிறோம்" என்று கூறினாள்.

இந்த மோட்டார் லெனின்கிராட் வீதியின் பக்கமாக செல்லும்போது, மொட்டை வீடுகள் தென்பட்டதும் அதன் காரணம் என்னவென்று நான் கேட்டேன். 'குளிர்காலத்தில் வெளிவேலை செய்வதற்கு மிகவும் கஷ்டமாய் இருக்கின்றது. இப்போது ஜனங்களெல்லாம் தொழிற்சாலையில் வேலைசெய்துகொண்டு இருக்கின்றனர். சிலர் நிலங்களில் வேலைசெய்ய அனுப்பப்பட்டுள்ளார்கள். வெயிற்காலத்தில் அவர்களையெல்லாம் வெளிவேலைசெய்ய அனுப்பப்படும்" என்று அவள் பதிலளித்தாள். நான் சற்று தயங்கி "கோடைகாலத்தில் உங்களுடைய விவசாயவேலை கூட முன்னணியில் செல்லுகின்றது உங்களுக்கு இந்தவெளிவேலை செய்யும் தொழிலாளிகள் கட்டடம் கட்டும் எல்லாதொழிலுக்கும் தேவையாய் இருக்கின்றார்கள். உங்களுடைய தொழிற்சாலைகளில்வேலையில்லாமல் வீண இருக்கமுடியாது. ஆகையால் இப்பொழுது எல்லா வேலைக்காரர்களையும் தொழிற் சாலைகளில்வேலைசெய்ய திட்டம்செய்தாலும், அவர்களைகோடைகாலத்தில் வேலைக்காக வெளியே அழைத்து சென்றாலும்உம்முடைய தொழிற்சாலைகள்வேலைக்காகவேண்டிகஷ்டப்படுதல் வேண்டுமே. அல்லது நீங்கள் எல்லாவேலைக்காரர்களையுமதொழிற்சாலையில் வேலைக்கு எடுத்துக்கொள்ளமுடியாது"என்றுகூறினேன். அவள் ஆமாம் எங்களுக்கு அனேக தொழிலாளிகள் வேண்டியிருக்கிறது எங்களிடத்தில் போதுமானவர்கள் கிடையாது என்று ஆத்திரதுடன் கூறினாள். நான் மறுபடியும் "நல்லது தற்போது நீங்கள் செய்யவேண்டிய வேலைகள் அநேகம் உள்ளன. நீங்கள் ஓர் புதிய தேசத்தை உற்பத்திசெய்கின்றதுமல்லாமல் ஓர் விவசாயாத் தேசத்தை தொழிற்சாலைக்குரியதேசமாக மாற்றிக்கொண்டு வருகின்றீர்கள். இத்தேசசத்தில் சில உபயோகமற்ற நிலங்கள் உள்ளன. அவைகளை குழிதோண்டுவதற்கும், சுரங்கங்கள் ஏற்படுத்தவும், புதியபயிர்களை வைக்கவும் புதிய கட்டடங்களும் பாதைகள் ஏற்படுத்த உபயோகித்துக்கொள்ளலாம். ஆகையால் அநேக தொலாளிகளுக்கு இதனால் நீங்கள் வேலைகள் கொடுக்கக்கூடும். ஆனால் இத்தகைய முன்னேற்றம் ஒருநாள் ஓர்முடிவுக்கு வரவேண்டும். அமெரிக்காவைப் போல உற்பத்தி பொருள்களைவிட நிலவழியும் பொருள்கள் குறைவாக இருக்கும் பொழுது, புதியதாக செய்யப்படும் பொருள்களை செய்வதை திருத்தவேண்டும். பிறகு நீங்கள் என்ன செய்வீர்கள்? இப்பொழுது வேலைசெய்துக்கொண்டு இருக்கும் தொழிலாளிகளை எவ்வாறு நீங்கள் இதரவேலை செய்ய விடுவீர்கள்? அந்த ஓர் நாளில், இப்போது முதலாளி ஆதிக்க முடைய தேசத்தில் இருக்கும்படியான வேலையில்லா திண்டாட்ட அவஸ்தை என்ன நிலையில் இருக்கின்றதோ அத்தகைய கஷ்டமான நிலைமை உங்களுக்கும் கிட்டும்" என்று கூறினேன். அவள்புன்சிறிப்புடன் "இல்லை உண்மையில் அவ்வாறு கிடையாது ரஷியாதேசம் அமெரிக்கா தேசத்தை யொத்த தன்று. இத்தகைய வேலையில்லா திண்டாட்டமானது முதலாளிகளின் வீரச்செயல்களே காரணமாயுள்ளன (ஆனால் இங்கே அத்தகைய ஓர் வீரச்செயலை செய்பவர் கிடையாது) ஒருவரும் மற்றவரின் வேலையைக்கொண்டு லாபம் அடைவதற்கு ஆசைப்படமாட்டார்கள். ஓர் நாளைக்கு எழுமணி நேரம் வேலைசெய்வதில் நாங்கள் அழிக்கும் சாமான்களை விட அநேகம உற்பத்தி பொருள்கள் செய்வோமானால நாங்கள் வேலையை சுருக்கமாட்டோம். ஆனால் வேலைசெய்யும் நேரத்தைசுருக்கலாம். நாங்கள ஒரு நாளைக்கு 8-மணிநேரம் வேலைசெய்துவந்தோம். பின்பு நாங்கள் அதை 7-மணிபாக செய்து விட்டோம். கூடுமானால் 6-மணிக்கோ 5-மணிக்கோ,அல்லது 4-மணிக்கோ குறைத்துக் கொள்ளுவோம்" என்று பதிலளித்தாள்.

நாங்கள் ஓர் குறுகிய வாசற்படியின் மூலமாக கடந்துசெல்லுகையில் நகரத்திற்கு ஓர் பழைய முக்கியமான வழியென்று அதை அவள் சுட்டிக்காட்டினாள். சார் காலத்தில் வியாபாரிகள் இருந்த வாசற்படிக்குப்பின் வசித்துக்கொண்டு இருக்கும்பொழுது, முதலாளி ஆதிக்கமாயிருந்த தேசத்தின் காரணத்தினால் ஜனங்கள் ஏழைகளென புலப்பட்டனர். "இந்த புதிய தேசத்தை" தவிர்த்து ஐரோப்பாவில் எல்லா விடங்களிலும் ஜனங்களின் தோற்றமும் அவர்களுடைய கண்பமான உடைகளும் கண்ணைகவரத்தக்க கார்களும், கண்ணுடிசாமான்கள் விற்கும் கடைகள்வரிசையாக இருக்கும் வீதிகளும், அக்கே அமைந்

தொடர்ச்சி 12-ம் பக்கம் பார்க்க.

அரசியல் நெருக்கடி.

(காம்ரேட்)

புண்ணேக்கீறி ஆற்றுவதே நாம் கையாண்டு வரும் முறை. பூரி மெழுகி மூடிப்பொதிந்து புழுத்து நாறவைப்பது நமக்கு உடன் பாடல்ல. உள்ளொன்று வைத்து ப்புறமொன்று பேசும் வாழ்க்கை நமது உடம்புக்கு ஒத்துக்கொள் வதில்லை. நமது அபிப்பிராயம் வெட்டொன்று துண்டிரண்டுதான். சென்ற சில வருஷங்களாக "அரசியல் என்பது அயோக்யத்த னம்" என்று அழுத்தமாகக்கூறி "சேசத்தரோகி" என்றபட்டத் தைத் தாராளமாகச்சூட்டிக் கொ ண்டோம். யதார்த்தவாதி வெகு ஜன விரோதி என்றுதான் பச்சை க்குழந்தைக்குக்கூடத் தெரியுமே! சத்தியத்தைஜீரணம் செய்யும்சக்தி நமது சமூகத்திற்குப் போதாது. ஆகவே சந்தியில் வாங்கியெடுத்து விடுகிறது.

ஃஃ ஃஃ ஃஃ

அரசியல் என்பது மனம், வாக் குக்காயத்துக்கு எட்டாத 'கடவு ள்' போல் கற்பனையல்ல. அனுப விக்கக்கூடிய விஷயந்தான். தாம ரைலித்தண்ணீரல்ல அரசியல். அரசியல் கட்சிகளின் போக்கதை யைகொண்டு அரசியலின் போக் யதையை அளக்கமுடியும் அங்கத் தினர்களால் ஆக்கப்பட்டது கட் சி. ஆகவே, ராஜீயவாதிகளின் ஒழுக்கமே, அரசியலின் அளவு கோல். பெரும்பாலான அரசியல் வாதிகளுக்கு நாக்கில் சத்தன்; நெஞ்சில் நஞ்சு. இம்முடிவு, சென்றகால அரசியல் அனுபவத்தின் பலன். 100க்கு 98பங்குள்ள ஏழை உலகத்தின் பெயரை உப யோகித்து சொந்த நன்மையை ப்பூர்த்தி செய்துகொள்ளும் 'பசு த்தோல் போர்த்த புலிகள்', நட மாடும் அரசியலே அயோக்கியத் தனமென்றதில் பிசகென்ன?

ஃஃ ஃஃ ஃஃ

இன்றைய ஜன சமூக வாழ்வு க்கு அரசியல் அத்யாவசியம். அர சியல் யந்திரத்தை ஓட்டு கிறவர்கள் யாரோ, அவர்கள் தான் சௌகரியம், அந்தஸ்து இவற்றின் உச்சாணிப் படியில் இருக்கக்கூடும். நிலம்ப டைத்த ஜமீன்தார்களும், பணம் படைத்த மில்முதலாளிகளும் பாங்கர்களுமே இன்றைய அர சாங்க யந்திரத்தை உருட்டும் அ திகாரம் பெற்றிருக்கிறார்கள். இ ந்தியாவின் அரசாங்க யந்திரதை இன்று வெள்ளை முதலாளிகளும் கறுப்பு முதலாளிகளும் சேர்ந்து இயக்குகிறார்களென்பது பகிரங்க ரகசியம். கறுப்பு முதலாளிகள் அரசியல் உரிமைகளில் ஒரு பங்கு பெறுவதில் அதிருப்திகொண்டு, ஏகபோக மாக அனுபவிக்க வே ண்டு மென்னும் பேராசையோடு "சுயராஜ்யம்" என்றபேரால் பொ துஜன ஆதரவுடன் நடத்தும்போ ராட்டமே காங்கிரஸ் கிளர்ச்சி என் பதுசமதர்மிகளின் தீர்மானம். சம தர்மிகள், உழைக்கின்ற மனிதர்க் கேசகல சௌகர்யங்களும் அதிகார மும் கிடைக்கும் சமதர்ம ராஜ்யத் தைக்காண முயல்கிறார்கள்.

ஃஃ ஃஃ ஃஃ

இன்று எந்த கோக்கினும் சட்டசபைப்பிரவேசமும் சுயராஜ் யக்கட்சிஸ்தாபனமுமே அடி படுகிறது. காந்தியாரும் சட்ட மறு ப்புக்கு முற்றுப்புள்ளி வைத்துவி ட்டார் சட்டசபைப்பிரவேசத் திற்கும் 'பங்களாமுண்டாதக" என்று ஆசீர்வதித்தும் விட்டார் மகா ஜனங்களின் பேராதரவை நாடி, சுயராஜ்யக்கட்சிப் புலிகள் திக்விஜயம் செய்து உறுமத் தொடங்கி விட னட சட்டசபைக் காதலர்கள் பலர் ச டசபைப்பிரவேசத்தின் அரு ணோதயத்தை தரிசிக்குமாறு கரங்கூபி நின்ற வண்ணமாயிருக்கி றார்கள். பொதுஜனங்களின் கண் ணீப்பொத்திக்குட்டியே பிழைப் பை நடத்திவந்திருக்கும் அரசியல் நிபுணர் (அயோக்கியர்) களின் அறபுத மூளைகளில் 'பஹர் டீஹர்' என்று வெடிக்கும் அபாரயோச னைகளால் 3வருஷ,5 வருஷ, 10 வருஷத்திட்டங்கள் "புலுபுலெனக் கலகலென" உதிர்ந்தமயமாயிருக் கின்றன. இவைபாவும் பட்டாஸ் வெடி, பாணவேடிகை என்பதை அரசியல் சதுரங்க ஆட்டத்தில் கிஞ்சிற்று ஞானம் பெற்றவரும் நன்கறிவர். வாயில்லாப் பூச்சி களுக்கு, வறுமையில் வாடிவதங் குவோர்க்கு, கோடிக்கணக்கான தொழிலாளி விவசாயிகளுக்கு இத்தனை ஆர்பாட்டங்களும் ஆ ரவாரங்களும் துளிகூடப்பயன் படா.

ஃஃ ஃஃ

முன்னிருந்த அரசியல் கட்சிக ளோப்பார்க்கிலும், ஸ்தாபனங்களைக் காட்டிலும், காந்தியாரின் சர்வா திகாரம் கொண்ட காங்கிரஸ் அ மைப்பு, பொது ஜன செல்வாக்கு ப் பெற்றிருக்கிறதென்பதில் இர ண்டபிப்பிராயமிருக்க முடியாது. ஆனால் காந்தியாரின் இன்றைக் கொள்கையும்,காங்கிரஸின் இப் போதைய லட்சியமும் பலவீன மானவை, பிற்போக்கானவை என்பதோடு முற்போக்குக்கு மு ட்டுக்கட்டை போடுபவையாயு மிருக்கின்றன. தீவிர அரசியல் அ றிஞர்கள் இந்த அபிப்பிராயத்தை வகோபித்து ஆமோதிக்கிறார்கள். காந்தியான் சட்டமறுப்பும் சத் யாக்கிரகமும் விஞ்ஞான அறிவுக் குப்பொருந்தா. அரசியல் போரா ட்டத்தில் காந்தியார் புகுத்திய மத உணர்ச்சியே காங்கிரஸ் தீர் ல்லுக்கு மூலகாரணம். அந்தரா த்மாவை நம்பி வாழ்வில் ஒவ்வொ ருகாரியத்தையும் செய்வதாகச் சொல்லிக்கொள்ளும் காந்தியா ரும் அவரது பக்தகோடிகளும் ம மது பேச்சை யோசனைக்கு எடுத் துக்கொளவது கூடத்துர்லபம். என்றாலும் பொதுமக்கள் யோச னைக்காகவே இந்தக்கருத்தை சமர் ப்பிக்கிறோம.

இஞ்சி மஞ்சளாய், மஞ்சள் உ ள்ளியாய், உள்ளி உள்ளேபோய் விட்டது என்பது பழமொழி.கா ந்தியார் கண்டுபிடித்த சட்டமற பும் பொதுப்பட்டவர் சட்ட மறுப்பு தனிப்பட்டவர் சட்டம றுப்பாகி, தனிப்பட்டவர்சட்டம றுப்பும் உலக்கை தேய்ந்து உளி ப்பிடியானகதைபோல் காந்தியா ரின் தனிப்பட்ட சட்ட மறுப்பா ய் வந்து முடிந்திருக்கிறது. இந்த அபிப்பிராயமும்என்னவாகுமோ? போகப்போகத்தான் தெரியும்.15 வருடங்களுக்கு முன்பு காந்தி ஒரு வர் தான் சத்தியாக்கிரகி. இன்று ம் அவர் ஒருவர்தான் சத்யாக்கிர கத்திற்குதகுதி யுடையவராம். 15வருடங்களாக நடந்த உலகத் தை ஆட்டிஅசைத்த கிளர்ச்சிகளி ன் பயன் என்ன? காந்தியாரிடம் நற்சாட்சிப்பத்திரம் பெறத்தக்க ஊண்மையான சத்தியாக்கிரகிகள் தோன்ற முடியாமற்போனதற்கு ஜவாப்தாரி யார்? என்று காந்தியா ரையே கேட்கின்றோம். 15வருட ங்கள் கடந்ததெல்லாம் பாணவேடி க்கையா? சந்தை இரைச்சலா? இந்திரஜாலக்கோலமா?

ஃஃ ஃஃ

எந்த இயக்கத்திலும் வெற்றி தோல்விக்குபபொறுப்பாளி தலை வனே. தன்வலியையும்,மாற்றான் வலியையும் துணைவலியையும் சீர் தூக்கிதக்கமார்க்கத்தில் போராட் டத்தை நடத்திச்செல்லவேண்டிய தலைவரின் கடமை.காந்தியார்த லமை வகித்து நடத்திய சட்ட மறுப்புத்தோல்வியடைந்த தென்றால், தோல்வி காந்தியாரை யே சாரும். பொது ஜனக்கள் அ வர் சொற்படி கடக்க வில்லையென் று காந்திபக்திகொண்டாடுவதெல் லாம்தங்களைத்தாங்களே வஞ்சிப் பதாகும்.

ஃஃ ஃஃ ஃஃ

இந்த சந்தர்ப்பத்தில் பொது மக்கள் காந்தீயத்தின் குறைபாடு களைத்தெரிந்து கொள்ளவேண்டிய அவசியத்தேவை. கீழ்வருவனவே:-

(1) காந்தியார் ஒருசிறந்த தக்காரேயன்றிப் புரட்சிக்கார ரல்ல. அவருடையபோக்கு, ஒட் டிவைப்பதும்,பொருத்திவைப்பது ம் தவிர மெழுச்சமரஸம் செய்வ தன்றி அவரால் தலைகீழ் மாற் றம் ஏற்படாது.

(2) தீண்டாமையை ஒழிக்க காந்தியார் சிரமப்படுகிறாரேயன்றி, வருணாச்சிரமதத்தை ஆழக்குழிவெ ட்டிப் புதைக்கத் துணியமாட் டார்

(3) "தரித்திர நாராயணர்" களின் ஊழியன் என்று அடிக்கடி பறை சாற்றுகிறார். ஆனால் வி வசாயிகளுக்கும், தொழிலாளி களுக்கும் சிறிது நன்மை ஏற்ப டவேண்டு மென்றுதான் அபிப் பிராயப்படுகிறார். விவசாயி— தொழிலாளியின் கட்சியில் இ ரண்டரக்கலந்து, அவர்களின் பூர ணப்பொருளாதார சுபிக்ஷத்திற் காக, மிட்டாதாரர்களையும், ஜமீன் தார்களையும் ஆலைமுதலாளிகளை யும் எதிர்த்துப்போர் தொடுக்க மாட்டார்.

(4) பூரணசுயேச்சைக்குக் கூ ட புதுப்புது வியாக்பானஞ்செய் கிறாரேயன்றி காந்தியார் பூரண மாக ஒத்துக்கொண்டதாகத்தெரி யவில்லை.

(5) "சாத்வீகத்திறகாகத்தே சத்தையும் இழப்பேன்" எனறு ம் இன்னும் பலவாறும் சாத்வீ கத்தையே பெரிதுபடுத்தி, லட்சி யத்தை விட மார்க்கத்திற்கு முக் கியஸ்தானம் கொடுக்கிறார்.

(6) ஆகாரம், மதப்பிரார்த்த னை, உபவாசம், வைத்தியசிகிச்சை ஆகிதத்தொழில் முதலிய தனிவா ழ்விலும் பொது வாழ்விலும், கா ந்தியாரின் சொந்த அபிப்பிராயங் கள் ஆதிகம் செலுத்துகின்றன. தற்காலத்துக்கு ஒவ்வாத மதவை ராக்யம் கொண்ட இக்கருத்தக் ள் பலர் உள்ளதில் அதிருப்தி

தொடர்ச்சி 11ம் பக்கம் பார்க்க.

புரட்சி

ரோடு 1934- ஏப்ரல் மீ 22-உ

நமது கடமை.

உலக முழுமையும், அந்த அந்த நாடுகளில் அந்த அந்த கக்ஷிகள் அரசியலைப்பிடித்து அந்தந்த தேசவாசிகளுக்குநன்மை புரிகின்றேமென்று சொல்லிக்கொண்டு, பற்பல துவாரராக்களில் உழைத்து வருகின்றன. நமது ஆங்கில நாட்டில் காஷனலிஸ்ட் கட்சி, அதாவது தேசியக்கக்ஷி என்று வழங்கும் ஓர் சார்பார், தோழர் ராம்சே மக்டொனல்டின் தலைமையின் கீழ், ஆங்கில நாட்டு அரசியலை நடத்தி வருகின்றார்கள். இவர்களுடைய முக்கிய போக்கு என்னவெனில், இருக்கும் சமூக திட்டத்தை வைத்துக்கொண்டு அங்கோர் சீர்திருத்தம், இங்கோர் சீர்திருத்தத்தைக்காட்டி, ஆண்டு வருவதாகும். பிரான்ஸ் நாட்டிலும், பழைய சேம்பர் ஆவ் டிப்புடீஸ் என்ற பழைய பார்லி மெண்டை வைத்துக்கொண்டு, முதலாளி, சிறு முதலாளி இயக்கங்களைப் பாது காத்து வருகின்றனர். ஜர்மனியில் எகாதிபத்திய கெய்சர் ஆட்சியை உடைத்தும், மழை நின்றும் தூவானம் நிற்கவில்லை என்பதுபோல் ஹெர்மனியைப்பிடித்த "சனியன்" ஒழியவில்லை. அவ்வுலகில், பெரும் பான்மையோர் தொழிலாளர், விவசாயிகளாக விருக்கின்றனர். எகாதிபத்திய அரசில் பட்டு வந்த கஷ்டங்களுக்கு விமோசனமின்றி, அத்தேச வாசிகள் தற்போது பாசிஸ்டிகள் கையில் அகப்பட்டுக் கொண்டு வருந்துகின்றனர். அமெரிக்க நாடு டிமோக்கிராட்டிக்களென்றும், ரிப்பப்ளிக்கர்களென்றும், இவ் விருகக்ஷிகளின் நடுவில் தவித்துத் தியங்குகாலை, ரூஸ்வெல்ட் என்னும் பெரியோர், சோஷலிசத்தை முதலாளித் திட்டத்துக்குள் நுழைத்துப் பார்க்கலாமாவென்று பரீக்ஷித்து வருகின்றார். மற்ற அமெரிக்க ஐரோப்பிய நாற்றாசுகளிலும் மேல்போன்ற பெரிய அரசுகள் தட்டித் தடுமாறிக்கொண்டு வருவதைப்போல், தடுமாறிக்கொண்டிருக்கின்றன. இந்த ராஜ்யங்களில் ஒன்றிலேனும், சாந்தமாகிலும், சமாதானமாகிலும், ஏற்பட்டதாகத் தெரியவில்லை. ஐரோப்பிய, அமெரிக்க உலகமெங்கும் குழப்பங்களே அதிகரிக்கின்றன. கஷ்டங்களும் அதிகரிக்கின்றன.

ஐரோப்பா, அமெரிக்க உலகம் கிலுகிலுத்து வருந்தி வருங்காலை, ஏனையநாடுகளில் அதினினும் பதின்மடங்கு கேடாயிருப்பதைக் காணலாம். ஜனப் பெருக்கிலும், தரித்திரத்திலும் உயர்ந்தநாடு சீனதேசமெனலாம். அதில் நாற்பது கோடி மக்கள் இரண்டு, மூன்று தலகர்த்த ராட்சியில் கட்டுண்டு கலகங்களிலேயே மூழ்கிக்கிடக்கின்றனர். அந்நிய அரசுகளால் அந்நாட்டுக் கக்ஷிகள் தூண்டப்பட்டு, முன்னுக்குபோக வொட்டாமல் தடுக்கப்பட்டு வருகின்றனர். அந்நாட்டு தேசீயக் கக்ஷியார் மாலுமியற்ற கப்பலைப்போல் தட்டுத்தடுமாறி நிற்கின்றனர். இன்னது செய்ய வேண்டுமென்ற துணிவும் அற்று, நாற்பதுகோடி மக்கள் பற்றில்லாத வாழ்க்கையில் மிதந்து வருகின்றனர். விளையும் நிலங்கள் தேசமுழுதும் நிறைந்திருந்தும், உலக நதிகளுக்கெல்லாம் பெரிய நதிகள் நிலங்களை நீர்ப்பாச்ச செய்துவந்தும் அடுத்தடுத்து பஞ்சங்களால், கோடிக்கணக்கான மக்கள் பசியால் சாகின்றனர். இந்த பயங்கரமான துர்பாக்கியத்தில் சீனர் இருந்துவந்தும், முதலாளி ஆதிக்கத்தில் கட்டுண்ட ஜப்பான் தேசம், அதன் உள்நாட்டுக் குழப்பத்தையும், வறுமையையும் கவனியாது, சீனதேசத்தைப்படை யெடுத்து, சென்னைராஜதானிக் கொப்பான நீர் வளம், நிலவளம் பொருந்திய மஞ்சூரியா நாட்டைப் பிடித்துக்கொண்டது. தன்னுடைய நாட்டில் உண்டாயிருக்கும் அதிருப்திக்கு பரிகாரம் ஒன்றும் தேடாது, அயல்நாடுகளைப் பிடிக்கும் வண்ணம் தனது போர்த்தலத்தை அதிகரித்துக் கொண்டே வருகிறது. உலக சமதானத்தை உருவமாக எடுத்திருக்கும் சோவியத் நிலங்களை, அபகரிக்கவும், ஜப்பான் பார்க்கிறது. இத்யாதி குழப்பத்தில் உலக பேரரசுகளும், சிற்றரசுகளும் தடுமாறிக் கொண்டிருக்க, நமது இந்திய தேசத்தின் நிலைமை என்ன? இந்த வேதமோதும்நாடாகிலும்சுகப்பட்டு வாழ்கின்றதா?

"சுயராஜ்யம் யாருக்கு" என்ற புத்தகத்தின் முதல் பாகத்தை வாசித்தவர்கள், நமது இந்திய நாட்டின் தற்கால நிலமையை எளிதல் உணர்ந்திருக்கலாம். பூர்முகத்தில் விசேஷ மொன்றுமில்லாமையாகத் தோன்றின போதிலும்அந்தர், முகத்தில் அதிர்ப்தியே நிறைந்துள்ளது. ரயில்கள் ஓடுகின்றன. ஆயிரக்கணக்கான பக்தர்கள் கோயில்களுக்கும், குளங்களுக்கும் யாத்திரை செல்கின்றனர். தேரும், திருவிழாக்களும் கோவில்களில் குறைவில்லை. சர்க்கார் வரி வசூலாகி வருகின்றது. சேனை, சிப்பந்திகளும், போலீசும், தத்தம் காபந்துகளைச் செய்துவருகின்றனர். இதன் மத்தியில் மக்கள் வாழ்க்கை பரிதாபகரமாக இருந்து வருவது பார்வையிலேயே தோன்றும். இந்த உள்நாட்டு மக்களின் நீமையை பரிகரிக்க, இதுவரை ஆண்டுவந்த அரசியல் திட்டங்களுக்குப் பதிலாக புதிய தோர் திட்டம் வருகையை யாவரும் எதிர்பார்க்கின்றார்கள்.

இந்த திட்டமாவதென்ன? அரசியல் மத்திய சபையில், 100-க்கு 200-பேர் அங்கத்தினர் நியமிக்கப்படப் போகின்றனர். இவர்களை நியமிக்க முப்பது லட்சம் வாக்காளர்கட்கு, மூன்று கோடி வாக்காளர்கள் வரப்போகின்றார்கள். நிலம், நீர், வீடுவாசல் இல்லாத இருபது கோடி மக்களுக்கு ஓட்டுறிமையில்லை. மகமதியர்களுக்குச் சில தனிப்பிரதி நிதிகளும் இந்துக்களுக்குச் சில தனிப் பிரதி நிதிகளும் சிற் சில மாகாணங்களில் கொடுக்கப்படுகின்றன. முதலாளிவகுப்பைச்சேர்ந்த நிலச்சுவான்தார்களும், வர்த்தகர்களும் சட்டசபைகளில் நிறைந்திருக்கப் போகின்றார்கள். தனிச்சொத்துரிமை, மதப்பாதுகாப்பு, ஜாதிக்காதரவு புதிய திட்டத்திலும் கார்க்கப்படப் போகின்றன. இனி தேச மக்களுக்கு என்ன வேண்டும்?? இந்த பாது காப்புகளோடு ஐந்நூற்றம்பத்தாறுசிற்றரசுகளும் ஏகாதிபத்திய ஆட்சியில் கலந்து கொள்ளப் போகின்றனர். இவர்களுடைய நவரத்தினங்களிழைத்த தலைப்பாகைகளும், வயிரமுடிகளும், வயிர தோடாக்களும், நவரத்தினமிழைத்த கண்டசரங்களும், காதுகளில் ஜொலிக்கும் வயிரக் கடுக்கன்களும், மகத்தான சட்டசபைகளில் ஜொலிக்கப் போகின்றன. இந்தக் காட்சியைக் காணும் முப்பதுகோடி மக்களின் பசி ஆறிவிடுமன்றே? தீரா வியாதிகளும் தீர்ந்துவிடுமன்றே? நாடும், நகரமும் தேச முழுமையும் பாலும், தேனும், தினைமாவும் நிறைந்தோடுமன்றே? இந்த முக்கிய அம்சியங்களை எதிர்த்து முட்டுக்கட்டை போடவோ, அல்லது ஒத்துழைக்கவோ, காங்கிரஸ் சுயராஜ்யக் கட்சி "மறுஜெனனமெடுத்துள்ளது.கெல்கர்கள் தங்களை சுதந்திரக்கட்சியைப்பலப்படுத்துகின்றனர். மூஞ்சேக்களும் இந்துமகாசபைகளை வலுக்கப் பார்க்கின்றார்கள். அரசாங்கமும் இந்தக் கட்சிகளை ஆவலுடன் எதிர்பார்க்கப்போகின்றது. இதன் மத்தியில் நமது அதாவது சோஷியலிஸ்டுகள் வேலை என்ன?

முக்கியமாக நமது பலவேறுபட்ட பல பெயர்களால் வழக்கப்பட்ட சங்கங்களை ஒன்றுபடுத்த வேண்டும். பலவிதக் கொள்கைகளையும், அபிப்பிராயங்களையும், ஒரே முகமாக மாற்றி தேசத்திலுள்ள மக்களுக்கு உணவும், நிலமும், உலக சமாதனமும் அடையவேண்டி அதற்கு வேண்டிய நடவடிக்கைகளைத் தேடவேண்டும். தற்காலத்திற்கு வேண்டியவை மக்களது உடலும், உயிரும் பொருந்தி வாழவேண்டியதே. இந்தத் தத்துவத்தை உணர்ந்தவர்கள் ஒருவரே. மற்ற எல்லாவிதக் கட்சியினரும் பயனற்ற வியர்த்தமான காரியங்களை மேல்போற்றிக்கொண்டு,அரசாங்கத்தில் நுழைகின்றார்கள். ஜாதி, மதம், பொருள், செல்வம், செல்வாக்கு, சுகபோகம் இவைகளை நாடுகின்றவர்களால் தற்கால அரசுகள் நடத்தப்பட்டு வருகின்றன. ஆனால் சோஷியலிஸ்டுகளோ வெனில் எதுவொழிந்தால் மக்கள் சுகப்படுவார்கள்? அவர்களைப் பிடித்தாட்டும் தீவினைகள் ஒழியும்? என்ற மனப்பான்மையை மேற்கொண்டவர்கள் இந்த மனப்பான்மையைப் பெருக்கவைப்பதுதான் நமதுமுக்கியகடமை.

கொளும்பு

சிவந்திபட்டி பகுத்தறிவு வாலிபர் சுயநல சங்கம்.

8-4-34 இரவு 9-30 மணிக்கு வேங்கந்தை 9-வீ. தோட்டம் தோழர் பி. புஸ்பநாதன் அவர்கள் அரையின்கண் தோழர் ஆர். எஸ். அவர்களின் தலைமைபின்கீழ் கூட்டம் நடைபெற்றது. சங்கத்தலைவர் எஸ். வி. பாலகணபதி அவர்களால் தலைவர் அவர்களுக்கும் உத்தியோகஸ்தர் அவர்களுக்கும் பூமாலை சூட்டப்பட்டு சங்க சட்ட திட்டங்களை சபையோர்களுக்கு வாசித்து காண்பிக்கப்பட்டது உத்தியோகஸ்தர்கள். காரியதரிசி தோழர் எஸ். பி. சைமன் அவர்களாலும் பொக்கிஷதார் தோழர் பி. புஸ்பநாதன் அவர்களாலும் வர்த்தமானங்களையும். வரவு செலவு கணக்குகளையும் சமர்ப்பிக்கப்பட்டு சபையோர்களால் ஒற்றுக் கொள்ளப்பட்டது. தோழர் என். பி. சாமிநாதன் அவர்களால் வாலிபர்களின் கடமை என்பதை பற்றி சொற்பொழிவாற்றினர். தோழர். பி. எம். முத்தையா அவர்களால் மதுவால் வரும் மதிமோசங்களை பற்றி சொற்பொழிவாற்றினர். தோழர். எஸ். வி. பாலகணபதி அவர்களால் மல்லிகை முல்லையின் குணமும் குணாதிசயமும் என்பதை பற்றி நுண்ணிய முறையில் மலர்களுக்கும் மற்றும் விருட்சங்களுக்கும் தனித்தனி வாசங்களும், ருசிகரங்களும் பூமியின் சக்தியே அல்லாது, அமைப்பு அல்லவென்று விபரித்து சுமார் 2 மணிநேரம் சொற்பொழிவாற்றினர். தலைவர் முகவுரையாக நம் இந்தியா நாட்டில் சாதி மதக்கொடுமையால் தாழ்த்தப்பட்ட மக்கள் படும்கஸ்டநஸ்டங்களுக்கு ஒவ்வொரு கிராமங்களிலும் பகுத்தறிவு வாய்ந்த வாலிபர்கள் 10 பெயராகிலும் சுயநலம் கருதாது முற்படுவார்களாகில் ஜாதி மதக்கொடுமை நீங்கி சுயாட்சையாக வாழலாம் எனற கற கோஷத்தினிடையில் தலைவர் முடிவுரை செய்யப்பட்டு தோழர். வ. மஹராஜன் அவர்களால் வந்தன உபசாரம் கூறப்பட்டு சிற்றுண்டு தாம்பூலாதிவழங்கப்பட்டு சுமார் 2 மணிக்கு கூட்டம் இனிது கலையுற்றது. (ஒரு நிருபர்)

செங்குந்த வாலிபர் இரண்டாவது மகாநாடு திருப்பூர்.

நாளது 1934ஆம் மேமாதம் 20, 21ந் தேதி ஞாயிறு, திங்கள் ஆகிய இரு தினங்களில் கோவை ஜில்லா, திருப்பூரில் செங்குந்தர் 21-வது மகாநாட்டுடன் செங்குந்த வாலிபர் இரண்டாவது மகாநாடும் நடைபெறும்.

மே இரண்டு மகாநாட்டிற்கும் சென்னை, மதுரை முதலிய விடங்களிலிருந்து பிரபல சுயமரியாதைத்தலைவர்களும், தேசிய பிரமுகர்களும் விஜயம் செய்வார்கள்.

கோவை ஜில்லாவில் எல்லாப் பாகங்களிலும் வாலிபர் சங்கம் ஸ்தாபிக்கும் பிரசார வேலையாக காரியதரிசி தோழர் டி.ஜி. வெங்கடாசலம் அவர்கள் சுற்றுப்பிரயாணம் செய்து வருகிறார்.

வாலிபர் மகாநாட்டு சம்பந்தப்பட்ட எல்லாவிதத் தகவல்களும் காரியதரிசி தோழர் டி. ஜி. வெங்கடாசலம் திருப்பதி, (வயா) பெருந்துரை என்ற விலாசத்துக் குளழுதித் தெரிந்துகொள்ளவும். என சங்கக் காரியதரிசி எழுதுகிறார்.

ஆதிதிராவிட தோழர் முத்து அவர்கள், காலஞ்சென்றார்.

சிவகங்கை அகிலாண்டபுரம் தெந தமிழர் கைத்தொழில் கல்வி நிலையத்தின் சார்பில் அமைந்துள்ள சமதர்ம வாலிபர் சங்கத்தின் அங்கத்தினரான தோழர் மு. ரெத்தினம் அவர்களின் தந்தை தோழர் வி. முத்து அவர்கள் சென்ற 12-4-34ந் தேதி பிற்பகல் மூன்று மணிக்கு சாதாரண நோயால் மரணமடைந்தார்.

அன்னவருக்கு வயது சுமார் 75 ஆகியும் அவர் ஸ்தாபனத்திற்கு செய்த தொண்டானது மிகவும் போற்றத்தக்கது. காலையில் எழுந்து நிலையத்தை சுத்தம்செய்து சாணங் கொண்டுவந்து மெழுகுவதும் நிலையத்தைச் சுற்றிலும் கல்ல மரம் செடி முதலியவை வைத்து தண்ணீர் வார்த்து பாதுகாப்பதும் மாணவர் மாணவிகளுக்கு வேண்டிய சவுகரியங்களையும் செய்து இன்னும் பல பொதுநலத்தொண்டு செய்வதில் அதிகப் பற்றுடையவருமாவார்.

(9ம் பக்கத்தொடர்ச்சி)

யைக்கிளப்புகின்றன.

(7) காந்தியாரின் வாழ்வு, ஜனசமூகத்தை விட மனிதனைக்கவுரவப்படுத்தும் உணர்ச்சியைப்பொது ஜனங்களிடம் தூண்டிவிட்டுத் தீவிர வாதிகளின் சுயேச்சையைத்தடைப்படுத்துகிறது.

(8) லெனினைப்போல், சமூக சாஸ்திர ஞானத்தையும், விஞ்ஞான அறிவையும் துணைக்கொண்டு இயக்கத்தின் எதிர்காலத்தை நிர்ணயஞ்செய்ய மாட்டாது, காந்தியார் மத உணர்ச்சியால் "அந்தராத்மா"வை நம்பி தவங்கிடந்து இயக்கத்தின் எதிர்காலதைத் நிட்டுப்படுத்துகிறார்.

9. காந்தியாரின் தத்துவங்கள் பொதுமக்களின் மதஉணர்ச்சியைத் தூண்டுவதாயிருக்கிறதே யொழிய, விஞ்ஞான வளர்ச்சியையும் மக்களிடைப் பெருக்குவதாயில்லை. எனவே காந்தியின் போக்குப் பிற்போக்காகவே யிருந்து வருகிறது

10. சமூக, பொருளாதார, அரசியல் விஷயங்களில் காந்தியார் சமரஸம் பேசுவதால் வெளித்தோற்றத்தில் பெருத்த ஆதரவுகிடைப்பது போல் தோன்றினாலும், ஆதரவு மேலெழுந்த வாரியே யொழிய, ஒழுங்கும், கட்டுப்பாடும், தியாகமும் கொண்ட தீவிரவாதிகளின் ஆதரவுக்குக் தகுதியுடையதாயிருப்பதில்லை.

சட்டசபைப் பிரவேசத்தால் மலையைப்புரட்டி விட முடியாது. சட்டசபைக்குப் போகவே கூடாதென்று முரட்டுப்பிடிவாதம் செய்வதோ, சட்டசபையே சர்வரோக நிவாணி யென்று நிட்டங்கட்டுவதோ, பூரணவாழ்வைவிரும்பும் சமதர்மிக்கு அடுத்ததல்ல. முதலாளி அரசாங்கத்தில் சமதர்மிகளில் சிலர் சட்டசபை நுழைவதால், கொள்கை விளம்பரமும், வைதீக எதிர்ப்புக்குறைவும் தொழிலாளிகுச் சிற்சில சாதகங்களும் ஏற்படக்கூடுமென்று சமதர்மிகள் கருதுகிறார்கள். சகலதுறைகளிலுமுள்ள சர்வஸ்தாபனங்களையும் கைபற்ற வேண்டுமென்பது சமதர்மிகளின் தீர்மானம். அப்பொழுதுதான் உலக வாழ்வைத் தொழிலாளிக்குச் சாதகமாகமாற்றியமைக்கக்கூடும் இந்த நோக்கமே, பலதேசத்து தீவிர வாதிகளையும் சட்டசபைப் பிரவேசத்திற்குச் சாதகமாயிருக்கத்தூண்டிற்று. நாமும் இக்கருத்தோடுதான் சட்டசபை நுழைவை விரும்புகிறோமென்பதை தோழர்கள் ஊன்றிக்கவனிக்க வேண்டியது முக்கியமான கட்டமை.

நாட்டின் நாலுபக்கத்திலும், சட்டசபைப்பிரவேசம் என்று வானமளாவப் பேசப்படுகிறது. காங்கிரஸ் தலைவர்களில் பெரும் பாலார் சட்டசபைக்காதலர்களாய்மாறி விட்டார்கள். மெஜாரிட்டி பத்திரிகைகளும் முழுமூச்சுடன் ஆதரிக்கின்றன. பிரிட்டிஷ் சிங்கத்தின் பிடரியைப் பிடித்து உலுக்கவே சட்டசபையை மோகிப்பதாக வரட்டு ஜம்பம் அடிக்கிறார்கள். இவர்கள், தாஸ், கேரு, லாலாஜீ ஆகியோர்களைவிட, மூர்த்திகளும் பாஷ்யங்களும் அன்சாரிகளும், தேசாய்களும் எவ்வளவு தூரம் மனிலக் கயிறுபிரித்திருப்பார்களென்பது நமக்குத் தெரியும். அரசியல் போராட்டத்தில் முதுகெலும்பு ஒடிந்து போய்விட்டது. இந்தக் காங்கிரஸ் அண்ணாத்தைகளுக்கு புரட்சி புணர்ச்சி பாணத்தடியால் அடியுண்டு நசுங்கி பூரண சுயேச்சை லட்சியம் உருக்குலைந்துபோய் சுத்த ரத்த மற்ற சுரைக்காய்களாய் போயினர் காங்கிரஸ் புலிகளில் அனேகர். கிரம பரிகாரம், செல்வாக்கு, சுபகலம் ஆகிய இவைகளைச் சட்டசபை மோகத்தில் கொண்டு தள்ளி விட்டதில் ஆச்சரியமொன்றுமில்லை.

* *

இருந்த இடந்தெரியாமலிருந்த சுயராஜ்யக் கட்சி மீண்டும் முளைத்து விட்டது. சுயராஜ்யக் கட்சி பழைய மண் கிண்ணிதான்; அதன் பிரமுகர்களும் பழைய கறுப்பர்கள்தான். அதன் லட்சியத்திலோ ஒரு எழுத்தும் கூட மாற்றமில்லை. முன்பு, பிரிட்டிஷ் சிங்கத்தை மூச்சுத் திணறும்படி செய்வதாகப் பிரதிக்ஞை செய்து, கச்சையை வரிந்து கட்டிக்கொண்டு இந்த 'கர்ம வீரர்'கள் சட்டசபையுள் குதித்தார்கள். ஒரு உரோமத்தைக்கூட அசைக்கமாட்டாது வெறும் கையோடு திரும்பி வந்ததுதான் கண்ட பலன்

* *

புற்றிலிருந்து ஈசல்கள் கிளம்புவதுபோல, இந்த தேசப் பிரிய, தேசோத்தாரண, தேச பக்தர்கள், சுயராஜ்யக் கட்சிப் பிரசாரத்துக்காக பரிவாரங்களுடன் கிளம்பி இருக்கிறார்கள். சத்திய மூர்த்தி சாஸ்திரிகளின் தலைமையில்தான் இந்த சுயராஜ்யக் கட்சிப் பட்டாளங்கள் தென்னாட்டில் ஊர் ஊராய்ப் பிரசாரத்திற்காகப்புறப்பட்டிருக்கிறது. சமதர்மிகள் பொது ஜனங்களை எச்சரிக்க வேண்டிய அரிய சந்தர்ப்பமிது.

மேதின விசேஷ அறிக்கை.

அடுத்தவாரம் 29-தேதி வெளிவரும் நமது "புரட்சி"யில் மேதினம் கொண்டாட வேண்டிய விதம் முதலியன விபரமாக அறிவிக்கப்படும்.

1. மே மாதம் முதல் தேதி செவ்வாய்க்கிழமையன்று சகல நகரங்களிலும், கிராமங்களிலும் பொதுக்கூட்டங்களிட வேண்டும்.

2. பிற்பகல் அந்தந்த ஊர் சங்கக் காரியாலயங்களிலிருந்து ஊர்வலம் புறப்பட்டு பொதுக்கூட்டமிடவேண்டிய இடத்திற்குச் செல்லவேண்டும்.

3, பொக்கூட்டத்தில் உபன்யாச நிகழ்ச்சிகள் கடந்தும் மே தின அறிக்கை தலைவரால் படிக்கப்பட்டு பொதுக்கூட்டத்தில் அங்கிகரிக்கச்செய்யப்படவேண்டும்.

4. நாளது 29ந் தேதி "புரட்சி"யிலும் 30ந் தேதி "பகுத்தறிவு"லும் மே தின அறிக்கை வெளிவரும்.

வரிப்பளுவால் குறுக்கொடியும் விவசாயிகளைக் காப்பாற்றப்போகிறார்களா? பாதுகாப்பற்றுப் பஞ்சைகளாய்ப் பரதவிக்கும் தொழிளாளிகளைக் கரையேற்றப் போகிறார்களா? மிருகத்தினும் கேவலமாயுழலும் ஒடுக்கப்பட்டவர்களின் மானத்தைப்பேண போகிறார்களா? வாடிவதங்கும்பெண் உலகத்தின் பூரணவிடுதலையைச்சட்டபூர்வமாக நிலைநிறுத்தப் போகிறார்களா? எதற்காக, யாருக்காக இவர்கள் சட்டசபைக்குப்போகப் போகிறார்களென்பதைப் பொது மக்களுக்குக் காட்டிவிட வேண்டும்.

(மும் பக்கத் தொடர்ச்சி)

துள்ள தொழிலாளர்கள் பல இருந்தபோதிலும் முற்காலத்தில் பணநெருக்கடி ஏற்பட்டும் ஜனங்கள் உண்ண உணவில்லாமல் இருக்கவும் ஏற்பட்டது. ஆனால் ரஷியா மேற் கூறியவாறு போலில்லாமல் மிகவும் தனித்திருப்பதாக தோன்றிற்று இரண்டு மூன்று அல்லது சில சமயங்களில் நான்கு வண்டிகள் ஒன்றாக இணைக்கப்பட்ட டிராம் வண்டிகள் ஓடிக்கொண்டு இருந்தன. அவைகளில் அதேகஜனங்கள் மிதிக்கும் பலகை மீது நின்றுக் கொண்டும் கம்பிகளை பிடித்துக்கொண்டும் இருந்தனர். மோட்டார்கள் கண்ணுக்கு புலப்படுதல் மிகவும் அற்புதமாயிருந்தது. அழகாகவும் உயர்வாகவும் உள்ள கடை ஒன்று கற்றறிந்த வாலிபனுடைய அந்த ஒட்டல் காரியதரிசியிடம் நான் அழைத்துக்கொண்டு போகப்பட்டேன். ஓர் ரஷிய வாலிபனிடத்தில் பேசுவதாகிய இந்த சமயத்தை விட்டு விட எனக்கு பிரியமில்லை. நான் அந்த அரசாங்க சட்ட திட்டங்களைப்பற்றி விசாரித்தேன். மரியாதைக்குத்தக்க வாறு ஒவ்வொருவருக்கும்அரசாங்கத்தினால் பணம் கொடுக்கப்பட்டு வருகின்றது என்பதை நான் அறிந்தேன். சாதாரண ஒரு தொழிற்சாலை வேலைக்காரனைவிட ஓர் என்ஜினீர் அதிகமான பணத்தை சம்பாதிக்கின்றான். ஓட்டல் வேலை அதிகாரியைவிட ஓட்டல் மானேஜர் அதிக பணம் சம்பாதிக்கிறான். முதலாளி ஆதிக்கமுள்ள தேசங்களில் உள்ளவர்கள் போல சுயேச்சையாக தானிஷ்டப்பட்டதொழிலோ அல்லது தனிப்பட்ட சொத்துவைத்திருக்கவோ அனுமதி கிடைக்காதது ஒன்று தான் விந்தியாசம். மேற்கூறிய எண்ணங்கள் எனக்கு நன்கு புலப்படாமையால் "சம்பளம் கொடுப்பதில் விந்தியாசம் ஒன்று ஏற்படுமேயானால் நீங்கள் எவ்வாறு வகுப்புபிரிவினையை நீக்கப்போகின்றீர்கள்" என்றும், சார் காலத்தில் உள்ள எல்லா ஜாதிகளையும் அழித்திருக்கலாம். ஆனால் மற்றொரு பலப்பட்ட ஜாதிப்பிரிவினையை உண்டாக்குவது திண்ணம் என்றும் நான் கூறினேன். அதற்கு அவர் "இவர்களைவிட சிலர் அதிக பணம் வைத்திருப்பார்கள் என்ற எண்ணுகின்றீர்கள். ஆனால் அது எவ்வாறு ஜாதிப் பிரிவினையைஉண்டாக்கும்?" ஓர் உயர்ந்த கட்டடமாம். ஓர் சிறிய என்று பதில் கூறினர். "முற்கால ம் நான் பார்க்கவில்லை. பாதையின் மீது பனிக்கட்டிகள் கெட்டியாக அழுத்தமாயிருந்தபடியால் பாதை வழுக்கலாக இருந்தது. கார்குறிப்பிட்ட இடமாகிய "அக்டோபர் ஓட்டல்" அடைந்தது. அது கண்ணுக்கதவுகளும், அழகான மாடிகளும் தங்குவதற்கு விசாலமான அறைகளும் உள்ள

மேதினம்

மே-மாதம் 1-தேதி தொழிலாளர் பண்டிகை.

உலகத் தொழிலாளர் ஒன்றுபடும் நன்னாள்.
இந்தியத் தொழிலாளர்களே!
மே திருநாள் கொண்டாடத் தவறுதீர்.
சுயமரியாதைச் சங்கங்கள்
ஒவ்வொன்றும் மே திருநாள் கொண்டாடுமாக.

த்தில் இருந்தவாறு ஐரோப்பாதேசத்தில் மத வகுப்புவாதங்கள் கிடையாது. இவைகள் பணத்தினால்தான் ஏற்படுத்தப்பட்டன என்பதை நீங்கள் நன்கு அறிவீர்கள்" என்று இயம்பினேன். காரியதரிசி சிறிது ஆத்திரத்துடன் "ரஷியா இதர தேசங்களைப் போலில்லாமல்படி பணத்தின் மதிப்பை இழக்க விட்டது. ஒருவர் மற்றொருவரைவிட அதிகமாக பணத்தை சம்பாதித்து வைத்து இருக்கிறான் என்று வைத்துக்கொள்ளுவோம். ஆனால் அந்த பணத்தைக்கொண்டு அவன் என்ன செய்ய முடியும்? அவனால் தனக்குத்தானே ஓர் வியாபாரத்தை ஆரம்பிக்கவோ தான் சுயேட்சையாய் அனுபவித்துக் கொள்ளவோ, சட்டத்தை வாங்கவோ தன்னுடைய சொந்த காரில் உல்லாசமாய் காலங்கழிப்பதற்கோ தன்னுடைய மகன் சோம்பேறித்தனமாக தின்று கொழுக்கும்படியாக வேண்டிய சௌகரியங்களைச் செய்யவோமுடியாது. சினிமாவுக்கும் மூன்றுஅல்லது நான்குதடவை காடகத்திற்கு ஒரு வாரத்தில் செல்லவும் ஒரு ஜதைக்கு பதிலாக நல்லதரமான மூன்று ஜதை செருப்புகளும் உயர்தர உணவு சாப்பிடவும் அல்லது மூன்று அல்லது நான்கு நாற்காலிகளும் இரண்டு மேஜைகளுமே வைத்திருக்க முடியும். அதற்குமேல் அனுவசியமாய் வைத்திருக்கும் எல்

லா சாமான்களையும் அரசாங்கத்தா ரால் பரிமுதல் செய்யப்படும். ஆகை யால் மறுபடியும் ஒரு ஜாதியானது எப்படி உயர்வடைய முடியும்" என் று தெரிவித்தார்.

"இப்பொழுதும்கூட வெளிப்ப டையாக இரண்டு ஜாதிகள் உள்ளன என்பதை நீங்கள் மறுக்கமுடியாது" வழிகாட்டுபவனை சுட்டிக் காட்டி "உங்களில் ஒருவர் மெல்லிய தும் சுத்தமானதுமான ஆடைகளும், கல்ல பாதரட்சைகளும், நான்கு ஜர்த்து சட்டைகளும் அணிந்து இரு க்க, அந்திய காலத்தில் கஷ்டங்கள் ஓர்புறம் இருக்க, நீர் சொல்லுவது போல இதர கீழ்தர வகுப்பார்களு க்கு சுத்தமற்ற ஒட்டுப்போட்ட துணி களும், ஆட்டு ரோமங்களினால் செய் யப்பட்ட மேல் சட்டைகளும், கிழி ந்த பாதரக்ஷைகளும் அணிந்துள் ளார்கள். செந்நிறமான முகங்களும் பலமுள்ள இரும்புபோன்ற கைகளும் இருப்பதுடனும், நரம்புகள் நன்றாக அமையப்பட்டு இருக்கின்றன" என்று கூறினேன். அதற்கு அவ் வாலிபன் சினத்துடன் "நாங்கள் தான் கீழ்தர வகுப்பார்கள்" என்று சொன்னன். நான் சிறித்து "இதை நான் ஒப்புக்கொள்ளமாட்டேன். நீ உயர்தர ஜாதியை சார்ந்தவன் உன் னிடத்தில் வகுப்பு பிரிவினை உள் ளது" என்றேன். அவர் "ஆமாம், ஆனால் நாங்கள் இன்னும் பொதுவு டமைகாரர்கள் அல்ல. ஆனால் சம தர்மகாரர்கள் என்பதை நீங்களறி வீர்கள். நாங்கள் பொதுவுடமை யைக் கையாளும் பொழுது பணமா ற்றம் ஒன்றும் இராது. ஒருவருக் காவது பணம் கொடுக்க கோரிடாது. ஒவ்வொருவரும் வேலை செய்து தீர வேண்டும். ஆனால் கூடுமானவரை யில் அந்த வகுப்பாருக்குக்கொடுக்க வேண்டும். குறைந்த தொகையோ அல்லது அதிகமான தொகையோ வேண்டியிருப்பின் அதை அவன் அடைவான். சமதர்மம் அதற்கு ஓர் வழிகாட்டியாயும் உள்ளது. இந்த புதிய உணர்ச்சியை ஜனங்கள் ஒத்துக்கொள்ளுமாறு நாங்கள் போ தித்து வருகின்றோம். ஆகையால் எங்களுடைய முன்னேற்றம் நிதா னமாக இருக்கவேண்டியிருக்கின் றது. அக்காலில் எங்களுக்குள் ஜாதி என்பதே இருக்காது என்று ஒதுக்கொண்டார்.

"நீங்கள் இவ்வியக்கத்தை எக்கால த்திற்குள் எதிர்பார்க்கின்றீர்கள்" என்று கேட்டேன். 'பதினேந்து வருடத்திற்குப் பிறகோ, முப்பது அல்லது ஐம்பது வருடத்திற்குப் பிறகோ (ஒருவரும் இதைப்பற்றி நிச்சயமாக கூறமுடியாது) முடியும். ஆனால் ஒரு நாள் எவ்வாராவது எங்க ளால் பொதுவுடமைக் கொள்கை அமுலுக்கு வந்தேதான் தீரும்" என்று அவர் கூறினர். அவருடைய கண்கள் சிவந்திருந்தன. அவரு டையமுகம் உறுதியை கூறும்படி யாய் ஓர் விசேஷத்தோற்றத்தை அடைந்திருந்தது. "ஒவ்வொருவரு க்கும் வேண்டியவைகளை அரசாங் கம் கொடுக்கக்கூடுமா?" என்றும், மாலையில் காரில் தினமும் போக விரும்பினால் இதை அரசாங்கம் ஒத் துக்கொள்ளுமா? என்று அவரை கேட்டேன் அதற்கு அவர் அப்படி யோ முடியும், அரசாங்கத்தில் ஒவ் வொருவருக்கும் கொடுக்கும் படியாக வேண்டியகார்கள் இருந்தால் கொடுத்தேதான் ஆக வேண்டும். மற்ற படி ஒரே காரை மூன்று அல் லது நான்கு குடும்பங்கள் உபயோ கித்துக்கொள்ள கொடுக்கப்படும். அல்லது அவர்கள் முறையே அடு த்த பிரதினிதியும் அந்த காரை உபயோகித்து கொள்ளலாம் ஒவ்வொ ரு குடும்பத்திலும் ஒவ்வொருக்கும் சரிசமானமாக எல்லா பொருள்களை யும் பகிர்ந்து கொடுக்கப்படும்" என்று தெரிவித்தார்.

(7ம் பக்கத் தொடர்ச்சி)

டைய ஆராய்ச்சியில் கிடைத்த மெ ஞ்ஞானங்களில் மிகச் சிறு பாகத் தைமாத்திரம் என்ன கொடுமைகடந் தாலும் கடக்கட்டுமென்ற உள்ளத் தில் அடக்கமுடியாமல் வெளியிட் டார்கள். ஒரு சில தூறகளையும் எழு தினர்கள். எழுதிய ஆராய்ச்சி நூற் களையெல்லாம் அள்ளிப் பித்தர்கள் சுட்டெறித்தார்கள். இத்தகைய கட வுள் பித்தர்களின் அநியாயங்களைப் பற்றி சரித்திர சம்பந்தமான இரண் டொரு உதாரணங்களைப் பார்ப் போம்.

9ம் நூற்றாண்டின் இறுதியில் தோழர் மன்சூர் கடவுள்பேரில் நம் பிக்கையில்லாமையால் தானே உண் மை "அனல்ஹக்" என்று கூறிக்கொ ண்டிருந்ததற்கும், இன்னும் முஸ்லீம் கள் "மூக்காலத்திற்குப் பொருத்த மான ஒருவராலும் இயற்றமுடியாத கடவுளின் திருவாக்கு"என்று நம்பிக் கொண்டிருக்கும் "குர் ஆனை" குர் ஆனில் விசேஷ தன்மையொன்று மில்லை, குர் ஆனைப் போன்ற நடை யில் சிறந்தவைகளை என்னால் இயற்ற முடியும் என்று புத்திவாதம் செய்த மைக்காக வேண்டியும் அக்காலத் திய கலீபாவும், முஸ்லீம்களும் அவ ரை நாஸ்தின் அல்லாஹ்வின் திருச் சட்டதிற்கு விரோதமாய் வாதம்ப ண்ணுகிறான் என்று கழுமரதின் ஏற்றிக்கொன்றார்கள்.

முன்னெருகாலத்தில் ஹிப்பேஷி யா என்னும் பெண்மணியை புரோகி தகொள்கையை கண்டித்தெழுதிய திற்காக குருமார்கள் அவ்வம்மையின் ஆடைகளை கலைத்து நிர்வாணமாகி சர்ச்சின் பீடத்திற்கு தூக்கிச் சென்று அவ்வம்மையின் சதையை கண்டம் துண்டமாகவெட்டி சித்திர வதை செய்தார்கள். 15-வது நூற்று ண்டுவரையில் கிருஸ்துவர்கள் மத த்தின் பெயரால் ஐரோப்பாவிலுள்ள யூதர்களை உயிருடன் தீயிலிட்டு சுட் டொரித்தார்கள். 15-ம் நூற்றாண்டில் செயின்ட் பார்த்தல மியோதினத்தில் 10,000 புரொடஸ்டென்ட் கிருஸ்து வர்களை ரோமன் கத்தோலிக்கர்கள் சித்திரவதை செய்து கொன்றார்கள். சரித்திர சம்பந்தமான 10000 கணக்கா ன உதாரணங்களையும் காட்ட முடி யும்.

பகுத்தறிவை பிரயோகித்தமைக் காகவேண்டி எண்ணற்ற அறிஞர்கள் சித்திரவதைக்குள்ளான தற்கும்மதஆ ராச்சியாளர்களுவேற்றப்பட்டதற் கும்: அறியாமையை அகற்றி அறி வைக் கொள்ளவிடாமைக்கும் அதர் மத்தை ஒழித்து சமதர்மத்தை நிலை நிறுத்த விடாமைக்கும் காரணம் பக் தர்கள் சொல்லும் எல்லாம் வல்ல எங்கும் நிறைந்த சர்வசக்தன் சர்வ ஞானி என்னும் ஆணவமிக்க அகம் பாவம் பிடித்த "கடவுள்" (ஆண்ட வன், அல்லாஹ்) என்னும் அர்த்த மற்ற சொல்லே யன்றி வேறல்ல. எனெனில் எல்லா ஞானங்களையும், எல்லா முன்னேற்றத் நிட்டங்களை யும் மதங்களில் கடவுள் சொல்லி விட்டார்; இதற்கப்பால் இனி ஞான மோ, அறிவோ, முன்னேற்றக் கொ ள்கைகளோ இஞ்சிற்றேனுமில்லை உள்ள ஞானங்களை யெல்லாம் சொல் லவேண்டியவைகளையெல்லாம் அணு பிரமாணமேனும் பாக்கிவைக்காமல் கடவுள் அவருடைய தீர்க்கதரிசிகள் மூலமாய் உள்ளதெல்லாம் இவ்வளவு தான் இதற்கப்பால் ஒன்றுமில்லை. என்று சொல்லி முற்றுப்புள்ளி வை த்துவிட்டதுடன் உலகம் எத்தனை கோடி வருஷம் சொன்னலும் உலக ஜனத்தொகை எவ்வளவு விருத்தியா னலும் அது எக்காலமாயிருந்தாலும் சரி அக்தக் காலத்திற் கெல்லாம் எனது மதங்களில் சொல்லியிருப் பது பொருத்தமாயிருக்கும் இதை மாற்றவே கூடாது என்றும் கண்டி ப்பான உத்தரவைக் கடவுள் ஒவ் வொரு மதத்திலும் முக்கியமாக இஸ் லாமதத்தில் போட்டுவிட்டார்.

எனவே கடவுளின் திருவேதத்தி லுள்ள தெய்வ வார்த்தைகளை யெல் லாம் ஒவ்வொரு சொல்லாக எடுத்து அதிலிருக்கும் அறியாமைகளையும் குறுகிய நோக்கங்களையும், மூடப் பழக்க வழக்கங்களையும் கண்டித்துக் கொண்டிருப்பதைவிட எல்லா மதங் களுக்கும் மூலபொருளும் கர்த்தாவு மாகிய (ஆஸ்திகச் சட்டப்படி எல்லா மதங்களுக்கும் கர்த்தா கடவுள்) கடவுளைகண்டிப்பதேஇல்லைகடவுளை ஒழிப்பதே போதும். எனெனில் உலகத்திலுள்ள எல்லா மதங்களும் வைராக்கியமிக்க ஆதாரமற்ற கடவு ள் என்னும் கயிற்றிலேயே தொங் கிக்கொண்டிருக்கின்றன! இத்தக் கடவுள் என்னும் அகம்பாவமான பதத்தின் ஆதாரத்தில் தொத்திக் கொண்டிருக்கும் மதங்களிலேதான் மக்களை முன்னேற்ற மடைய விடாத மூடப்பழக்க வழக்கங்களும் குருட்டு நம்பிக்கைகளும், பாமர மக் களை பகற் கொள்ளையடிக்கும் சோம் பேறி மத குருக்களும்; மத சண்டை களும்; வீண் செலவை உண்டு பண் ணும் திருவிழாக்களும்; பெரும்பா ன்மையினர்களாயெ தொழிலாளி களின் உழைப்பிலுல் இந்திரபோக வாழ்க்கை நடத்தும் முதலாளித்துவ க் களும்; பெரும்பான்மையான ஏழைகளுக்கு பாதகமாக ஜட்டி செலுத்தும் அரசாங்கங்களும்..... நர்த்தனமாடுகின்றன. இந்த நர்த்தன த்தில் தான் இன்றைய ஏழைத் தொழிலாளிகள் அறியாமையிலும் எல்லாம் சரி; கடவுள் வைத்தபடி யே நடக்கும்; அவனன்றி ஓரணுவும் அசையாது; நமது தலைவிதிப்படி இவ் வுலகில் கஷ்டப்பட்டுத்தான் ஆகவே ண்டும்: அப்படித்தான் நமது பவத் தையும் அவரது பைபலும், இவரது குர் ஆனும்.....சொல்வது என்ற நினைத்துக்கொண்டு அசின் நின்ற வர்கள் போல் அறிவை இழந்து எல் லாவற்றையும் மறந்து தனது வித தலைவிதி யை அசைத்துக்கொ ண்டிருக்கிறார்கள். மதாச்சாரிகளு க்கும் இதுதான் சமயம் என்று வா ந்திபத்தை விடாமல் அடித்துக்கொ ண்டு (மதத்தை விடாமல் உபதேசி த்துக்கொண்டு) இருக்கிறார்கள். ஏழை தொளிலாழிகளின் வாந்திய க்களின் கோஷத்திலும் (மதங்களின் உபதேசத்திலும்) மயங்கிக்கொண் டை போகிறார்கள். மதச்சாரிகள் ஏழை தொழிலாளிகளின் வாந்தியத் தால் மயக்கி (மதத்தால்மயக்கி) முதலாளிகள் உருஞ்சி விட்டு பாக்கி யிருக்கும் இரத்தத்தையும் உருஞ்சி விடுகிறார்கள், கடைசியில் ஏழை தொழிலாளிகள் எலும்பும் தோலு மாய் விடுகிறார்கள். எனவே உல கில் மதங்களின் பெயரால் கூடக்கும் மேற்காட்டிய அத்தனைக்கும் அடிப் படையானதும் மூலகாரணமுமாகிய 'கடவுள்' என்பதை எல்லா மக்களும் இலேசாக உண்மும்படி எடுத்துக் காட்டி 'கடவுள்'என்னும் அகம்பாவ மிக்க அர்த்தமற்ற கொல்லிருந்து மக்களை விடுவித்து விடுவதே யாகில், உலக மக்கள் எல்லோரும் பகுத்தறிவுத் தோழனோடு முன்னே ற்றம் என்னும் தேர் ஓடிய மார்க் கத்தில் உல்லாசமாகச் செல்வார்கள். இத்தகைய வைராக்கிய மிக்க கட வுள் அபிமானத்தை விட்டால்தான் உலக மக்கள் எல்லோரும் குறுகிய 'தேசாபி மானம்' பாஷாபி மானம் ஜாதிஅபிமானம்மதாபிமானம் எல்லா வற்றையும் அகற்றி மனுஷாபிமான த்துடன் எல்லோரும் இன்புற்று வாழும் சமதர்மத்திற்கும் பொது வுடமைக்கும் இடம் கிடைக்கும். அன்றுதான் உலகில் சாந்திம்ம் சமா தானமும் நிலவும்.

தொழிலாளர் 'பண்டிகை' மே தினம் ஒன்றே

டிக்கட் 1க்கு விலை

ரூ.

4—0—0

டிக்கட்டிற்கு பணம்பெற
முடிவு தேதி 15-5-34

முதல் பரிசு பெற்றவர்.

மியூட்சுவல் கிளப்

டெர்பி

6—6—34.



பிரைஸ் குலுக்கும்காட்சி.

எல்லா வேடங்களிலும் மேதை சார்பாக டிக்கட்டுகள் விற்க ஏஜெண்டுகள் தேவை.

அதிகாரம் பெற்ற மியூட்சுவல் கிளப் ஏஜெண்டு:—

S. K. மாதவலு, திருச்செங்கோடு, சேலம் ஜில்லா S.I.

தொழிலாளிக்கு லாபத்தில் பங்கா?

காந்தி—ஏமாறுதீர்கள்.

பிரஞ்சு இந்தியாவில் கிருஸ்தவர்கள் ஏகபோக உரிமை அநுபவிப்பதை போல, தமிழ் நாட்டில் பார்ப்பனர் ஏகபோக உரிமைக்காரர்கள். இவர்களைப் போலவே பம்பாய், ஆமதாபாத் மில்காரர முதலாளிகளாகும். இந்திய சர்க்கார் ராணுவத்துக்கும், வெள்ளைக்கார மாஜி உத்தியோகஸ்தர்கள் பென்ஷனுக்கும் பணம் ஒதுக்க ஒருக்கால் மறந்தாலும்மறப்பார்கள். ஆனால் தமது வடநாட்டு மில் முதலாளிகள் தங்கள் சங்கதியை மறப்பதில்லை. கதர் துணிக்கு கதர் பக்தர்கள் வரிப் பணம்கொடுப்பதைப் போலவே மில்காரமுதலாளிகளுக்கும், சர்க்காரும் வரிகஷ்டமடைவதைப் போல், மில்துணி, நூல், இவைகளை உபயோகப் படுத்துகிறவர்கள் வரிகொடுக்கவேண்டும்.

சிலவருடங்களுக்குமுன்பு ஆமதபாத் மில்தொழிலாளிகளுக்குள் ஓர் பலமான ஒற்றுமையுண்டாகி பெறும் கிளர்ச்சிசெய்து, சிறிது பலன் அடைந்தார்கள், இவ்வருடம் ஆமதாபாத் மில் முதலாளிகள் தங்கள் மில்லுகளில் ஆள்குறைப்புதிட்டத்தையும் கூலிகுறைவு திட்டத்தையும் கையாள ஆரம்பித்ததும், மில் தொழிலாளிகள் பலமாகவிழித்துக்கொண்டார்கள். முன்பு கடந்த ஒப்பந்தத்துக்கு விரோதமாக, மில் முதலாளிகள் செய்வதாக கூறினர்கள் மில் முதலாளிகளோ நஷ்டம் அதிகம் ஆவதால் இம்முறையை கையாள்வதாக கூறினர்கள். இதற்கு தொழிலாள சங்க உத்தியோகஸ்தர்கள் மில்லுகளில் நஷ்டம் என்பது பொய் என்றும், மில்வரவு செலவுகணக்கில் நஷ்டமென்பது உண்மையானால், தாங்கள் இனியும் மில்களில் வேலைசெய்து அரை வயிற்று கஞ்சிக்கு கூலிபெற்றுக்கொள்கிறோம். மில்வேலையிலேயே அழுது எலும்பு உருகியவர்கள் எங்கள் கிராமங்களுக்கு செல்கிறோம். கணக்கை காட்டுங்கள் என்று கேட்டார்கள் இதற்கு சரியான காணயமான பதில் கூறாது, தொழிலாளி மில் கணக்கை பார்க்க கேட்பதா? கொடுப்பதா? அதுமில் முதலாளிகளின் சுதந்திரத்தில் தலையிடுவதாகும் என்று வேறுபதில் கூறி காலம் கடத்திவந்தார்கள்.

கிருக்கி.

பம்பாய் மாகாணத்தில் பெரும் மில் தொழிலாளிகளுக்குள் பொதுவேலை நிறுத்தம் காலை 23-ந்தேதி என்று தெரிந்ததும் இதில் ஆலை தொழிலாளர்களுடன் இவர்கள் சேராதுபிரிக்க ஓர் தந்திரம் செய்துவிட்டார்கள். காந்தியை பிடித்து சமாதானம் என்று இன்றுசொல்ல ஆரம்பித்துவிட்டார்கள். சென்ற 4-மாதத்துக்குள் ஆறு, ஏழு, தடவை தொழிலாள யூனியன் உத்தியோகஸ்தர்கள் சொல்லி வந்ததுக்கெல்லாம், காதுகொடாது வேறுவேலை இருக்கிறது என்று சால் ஜாப்பு சொல்லி வந்த காந்திபாபுவும் இன்று சமாதானத்துக்கு புறப்பட்டுவிட்டாராம். இக்கெருக்கடியில் ஆமதாபாத் மில் தொழிலாளிகள் என்னசெய்யப் போகிறார்கள்.

வாஸ்தவமா.

காந்திஜீயின் யோசனைப்படி மில் தொழிலாளிகளும், மில் முதலாளிகளும் ஓர் சமரச திட்டம் தயாரித்து வருகிறார்கள்.

1. ஜீவனத்துக்கு இன்றியமையாதனவான ஓர் குறைந்தபட்சமான சம்பளதிட்டம் நிர்ணயிக்கப்படும்.

2. கம்பெனியின் பங்குதாரர்களுக்கு கிடைக்கவேண்டிய லாபம், ஏஜண்டுகளுக்கு கமிஷன், கட்டிடம், சாமான்கள் போதுமானநிதி, இம் மூன்று விதசெலவினங்கள் போக, மிஞ்சி லாபமேற்பட்டால் இன்ன வீதாச்சாரப்படி அதை, மில் முதலாளிகளும் தொழிலாளிகளும் பங்குபோட்டுக்கொள்வது என்பது பற்றி வரையருக்கப்படும்.

3. பங்குகாரர்களுக்கு 100-கு 8 விகிதம் லபாம் கிடைத்தால் போதுமென்றும் ஏஜண்டுகளுக்கு இப்போதைய கமிஷனில் பாதிகொடுத்தால் போதுமென்பதும், தொழிலாள சங்க உத்தியோகஸ்தர்களின் அபிப்பிராயமாகும். போன உடன்படிக்கையின் காலத்தில், காந்திமுன்பு செய்யப்பட்டும், முதலாளிகள் இந்த ஆறுமாதகாலமாக காந்தியை அலக்ஷியபடுத்தி இருந்தாலும், அவ்விதம் சொல்வதற்க காந்தி தொழிலாளிகளை ஏமாற்றி இருந்தாலும், எதிர்கர்லம் ஏமாறுமலும், சகோதர தொழிலாளிகளை காட்டி கொடதும் இருப்பார்களா?

ரஷ்யாவின் மேம்பாடு.

சமீப காலமாக முதலாளித்துவ நாட்டில் ஏற்பட்டிருக்கும் அளவு கடந்த பொருளாதார நெருக்கடியை வாசகர்கள் நன்கு அறிவார்கள். ஆனால் சோவியத் ருஷ்ய காடோ சமதர்மத் திட்டத்தால் பொருளாதார முற்போக்குடன் தலை நிமிர்ந்து பிறநாடுகள் வெட்கித் தலைகுனியும்படி, முன்னேறிச் செல்லுகின்றன. ஒவ்வொரு முதலாளித்துவ ராஜ்யதிலும் 3கோடி4கோடி பேர்கள் வேலையில்லாமல் திண்டாடி அவதியுறும் போது, ரஷ்யாவோ தங்கள் நாட்டில் "வேலையில்லாது ஏங்குவோரோ அல்லது நாளைக்கென்செய்வோம் என்று கவலை யுறுவோரோ" இல்லாமல் செய்து விட்டது.

ரஷ்யாவைப்பற்றி முதலாளித்வ நாடுகளும்—அரசுகளும் செய்யும் விஷமப் பிரசாரமானது, 1916-18வருஷங்களின் மகாயுத்தப் புளுகுகளுக்குச்சமானமாகும்.

சோவியத் ரஷ்யர்களின் முதல்5-வருஷ திட்டத்தின் முக்கிய நோக்கமாவது:—பொருள்கள் உற்பத்தி விஷயத்திலும், அதன் அபிவிருத்தி விஷயத்திலும் பழைய ரஷ்யர்கள் கொண்டிருந்த முறையை அடியோடு மாற்றி நவீன முறையால் அதிக மேம்பாட்டிற்கு உழைத்து வெற்றி பெருதல் என்பதாகும். விவசாய விஷயத்தில் கூட்டுப் பண்ணைத் தொழில் முறையையும், இயந்திர காகரீக முறையையும் கைக்கொள்ளுதல் என்றும் நிர்மாணித்ததுமாகும்.

உலகம் பாதுகாப்பு எனப 5 வருஷ திட்டத்தின் முக்கிய இரகசியமாகும். இதன படி எல்லாச் சந்தர்ப்பங்களிலும் ரஷ்யத்திட்டம் வெற்றி ஏற்பட வேண்டுமென்பதாகும்.

ரஷ்யர்களின் 5வருஷ திட்டவெற்றியானது அவர்களுடைய பூர்வாங்க திட்டத்திற்கு மேல் ஒரு மடங்கு அதிகப்பட்டிருக்கிறது. ரஷ்யர்களின் உற்பத்திப் பொருள்கள் தொழில் வளர்ச்சிகள் முதலிய அளவுக்கு மீறி ஏற்பட்டிருக்கின்றன.

தனித்தனி முதலாளிகளின் கட்டை வசப்படுத்தி நடத்தை, ஐக்கிய அபேதவாத தர்மக்குடியரசு காடாக உலகத்திலேயே ஒன்று ஒரே நிலமாக செய்து வருக்கும் சரிநிகர் பயனையும் அது விட்டது என ஸ்டாலின் கூறுகிறார்.

ரஷ்யாவில் 10லக்ஷம் பேர் வேலையில்லாமல் திண்டாடியதை 40ஆயிரம் போராக்குறைக்க வேண்டுமென்ற ஒரு சேர்க்கமும் முதல்வது ஐந்து வருடத்திட்டத்தில் இருந்தது. ஆனால் 1930வருடத்திற்குள் சமதர்மராட்சன ரஷ்யா அடியோடு வேலையில்லாத் திண்டாட்டத்தை அகற்றி விட்டது.

தொழிலாளர்களுடைய வாழ்க்கையின் உயர்வும் 5 வருஷ திட்டத்தால் மேம்படுத்தப்பட்டிருக்கிறது. சம்பளம் ஒன்றாராளமாக உயர்த்தப்பட்டிருக்கின்றன. வாழ்க்கையில் சதா சந்தோஷமாக இருக்கத்தக்க எல்லா சாதனங்களும் அங்கு சமதர்மிகளால் நிர்மாணிக்கப்பட்டிருக்கிறது

காங்கிரஸ் கமிட்டி குழப்பமான நிலை.

அகில இந்தியக் காங்கிரஸ் கமிட்டியின் பொதுக் காரியதரிசி டாக்டர் சையத்முஹமது அறிவிப்பது:—

அகில இந்தியக் கமிட்டிக் கூட்டத்தை சாஞ்சியில் கூட்டுவது சம்பந்தமாக ஓர் குழப்மான நிலைமை எற்பட்

டது. எத்தக் கூட்டமும் கூட்டப்படுவதாக இதுவரையில் அறிவிக்கவில்லை. வேறு அகேக காரணங்களை உத்தேசித்து ராஜ்சியில் கூட்டத்தைக் கூட்டவும் உத்தேசமில்லை. சர்க்கார் தடுத்திருந்தால் நான் ராஜ்சியில் கூட்டங்கூடவேண்டுமென்று கூறியிருப்பேன். ஓர் பெரிய ட்டம் கூடுவதற்கு ராஜ்ரியான இடமில்லை.

ங்கிய மாகாணக் காங்கிரஸ் ழியர்கள் சமீபத்தில் கூ ராஞ்சியில் அ. இ. கா. கமிட்டிகூட வேண்டாமென்று கேட்டுக்கொண்டு இருக்கிறார்கள். சில நண்பர்களைத்தவிர வேறு யாரும் கமிட்டிக் கூட்டத்தைக் கூட்ட வேண்டுமென்று கேட்கவில்லை. மே முதல் தேதி காரியக் கமிட்டி கூட்டம்மட்டுமே கடைபெறும்.

தொழிலாளிக்கு வீடு.

18க்தேதி மதுரைதெல்லாக் குளத்துக்கு அருகில் உள்ள ஆ ம்பாளையத்தில் வசிக்கும் ஏழ தொழிலாளிக்கு, குடியிருப் வசதிக்காக, மதுரை இ. கூ டுறவு சங்கத்தாரால் கட்டப்பட்ட கட்டிட திறப்பு விழா டைந்தது.

கனம் பி. டி. ராஜன் இவ்விழாவை நடத்தினர். தெல்லாக்குளத்திலிருந்தும் சுற்றுவட்ட கிராமங்களிலிருந்தும் ஏராளமான பொது ஜனங்கள் விஜயம் செய்தது குறிப்பிடத்தக்கது.

பாஷாவைதீகம்!

உஷார்!

(Rebel)

ந்த தரையில் புகுந்து முன்னேற்றி நடக்தாலும் வைதீகம் பாடபு போல் குறுக்கே படுத்துக்கொண்டு வழியை ம்றைக்கிறது. இன்னமும் கெடுவேண்பந்தயம் என்ன? என்று விருது கூறி பகுத்தறிவோடு போட்டி போட்டு தோற்பது வைதீகத்தின் வாடிக்கை. "பழையன கழிதலும் புதியன புகுதலும் வழுவன கால வகையினாலே" என்பது இலக்கணம். வைதீகபித்தர்கள் பாஷையில்கூட இவ்வுண்மையை உணர்ந்து ஒழுகுதாக காணோம் தமிழ் பாஷை அன்றிருந்த மேனியே அழியாதிருக்க வேண்டுமென்று குரங்குப்பிடிவாதம் செய்யும் கர்நாடகங்கள் அநேகம். குப்பை கூளத்தில் காளான்கள் முளைப்பதைப்போல் "கிளிப்பிள்ளை" பண்டிதர்களும் 'கிராமபோன்' புலவர்களும் தமிழ் நாட்டில் நூற்றுக்கணக்கில் அவதரித்து, எட்டுச் சுரைக்காய்களாய் பாஷையின் வளர்ச்சிக்கு மலைபோல் கெடுதல் செய்து காலத்தள்ளுகிறார்கள்.

திருநெல் வேலி சைவ வேளாளர் பண்டிதர் குழாமும் தமிழைக்கெடுக்கிறவர்களில் முதற்பரிசு பெற்றவரகள். லெமூரியா ஆராய்ச்சியும், அகஸ்தியர் வாழ்வின் பரிசீலனையும், திருஞான் சம்பந்த காலவரையறையும், இன்ன பிறவுமே திருநெல்லிப்பிள்ளை மார்களின் அறிய தமிழ்தொண்டு. "கராபுரா" தமிழ்தான் இவர்களுக்கு பேசவும் எழுதவும் தெரியும். பொது ஜனங்களுக்கு விளங்குமாறு பேசவோஎழுதவோகுட்டிக்கரணம் போட்டாலும் இவர்களுக்கு வராது. முற்போக்குக்கும் இவர்களுக்கும் மலைக்கும் மடுவுக்கு உள்ளசம்பந்தம். இத்தனைலக்ஷணமுள்ள திருமேனிகள்தான் தமிழர் மகாநாட்டைச் சிறப்பாக நடத்தி முடிக்கும் பொறுப்பை த்தோள்மேல் போட்டுக்கொண்டு கச்சைக்கட்டி உழைக்கிறார்கள்

இளந்தமிழர்களே! காலத்துக்கிசைந்தபாளையை வளர்க்கும் ஆர்வமுடையோர்களே! திருநெல் வேலியில்கூடப்போகும் தமிழர் மகா நாட்டுக்குச்செல்லுங்கள். பாஷாண வைதீகர்களை முற்றமுற்றமுடியுங்கள். காலத்திற்கிசைந்து வளர்ச்சிபெறும், ஆங்கிலம், பிரஞ்சு, வங்கம் ஹிந்தி முதலிய பாஷையைப் போல் தமிழும் வளர்ச்சி பெறக் கங்கணம் பூண்டு உழையுங்கள்.

சேலம்.

நாளது ஏப்ரல் மாதம் 26தேதி புதன்கிழமையன்று சேலம் செவ்வாய்ப்பேட்டை சமதர்ம நாடகசபை கட்டிடத்தில் மை சபை ஆரம்பவிழா நடைபெறும். தோழர் அய்யாசாமி பி. ஏ., பி. எல்., தலைமை வகிப்பார். சென்னை தமிழரசு ஆசிரியர் தோழர் மாசிலாமணி சபையை ஆரம்பித்து வைப்பார்.

(நமது நிருபர்)

விபசார வழக்கு

———:0:———

நேற்று ஈரோட்டில், விபசார விடுதி வைத்து நடத்தியதற்காக வீரம்மாளுக்கி ஒரு வருஷத் தண்டனை டிப்டி. கலெக்டர் விதித்தார். பல முக்கியநகரங்களைபோல வே ஈரோட்டிலும் விபசாரிகள் மலிந்திருப்பது ஒழியவேண்டுமென்பதுதான் நமது நீண்டகால முயற்சியாகும். ஆனல்மனித தர்ம மற்றமுறையில், இன்றையசமுதாய பெண்களின் இழிநிலையைக் கொண்டு அவர்களை நாசப்படுத்த வேண்டுமென்பது கூடாதகாரியம்

பெண்களுக்கு பொருளாதார சுயேச்சையில்லாமையும், குடும்பத்தில் சமத்துவமின்மையுமே பெண்களில் சிலரை இக்நிலைக்கு ஆளாக்கியிருக்கிறதென்பதையாரும் மறுக்கவே முடியாது. விபசாரத்தில் ஈடுபட்டுள்ள பெண்களுக்கு தக்கதொழில்முறையைக் கற்றுக்கொடுத்துவிட்டடால், அவர்கள் ஒருக்கலும் இன்றைய விபாரத்தில் ஈடுபடமாட்டார்கள் என்பது உறுதி. நிர்க்கதியாக பெண்களை தவிக்கவிடுவது விரும்பதக்கதல்ல வென்பது நியாயம் என்று எல்லோரும் ஒப்புக்கொள்வார்கள். ஆகவே விபசாரப்பெண்களுக்கு அவர்களுடைய வயிற்றுப்பாட்டுக்கு தக்கது செய்ய சர்க்கார் முன்வர வேண்டும்.

டிப்டிகலெக்டர் அவர்கள் ஷெகேசில் 1 வருஷதண்டனை விதித்தது மிகவும் கடுமை என்பதே நமது வாதம். முதல் தடைவையாக நன்குஎச்சரித்து விட்டு அனுப்பி இருக்கலாம். அல்லது மிகச்சிறிய தண்டனையைக் கொடுத்திருக்கலாம். மற்றும் ஒருவிஷயத்தை டிப்டிகலெக்டருக்கு தெரிக்க ஆசைப்படுகிறோம். அதாவது விபசாரத்தை ஒழிக்க ஆண்போலீசை விட,இங்கிலேயில் பெண்போலீசே சிறந்ததென்ற ஓர்முடிவிற்குவந்து பலமுற்போக்குநாடுகள்பெண்களை நியமித்திருக்கின்றன. பெண்களின் பலவழக்குகளில் ஆண்போலீசார் சரியாக நடந்துகொள்ளவில்லை யென்பதே மெக்ஸிகோ, பிரான்ஸ், சைனு, ஆஸ்திரேலியா போன்ற நாடுகளின் துணிந்த முடிவு குற்றத்திற்குஆளான வாலிபப் பெண்களை ஆண்பேசலீசார் தக்கவாறு நடத்த இயலுமா? அன்றி பெண்போலீசாரால் சாலுமா என்பதை கலெக்டர் தீர ஆலோசனை செய்து பார்க்கட்டும்.

பணம் படைத்த பெரிய தனக்காரர்களும் அதிகாரப்பதவியில் உள்ளவர்களும் பெண்கள்விபசாரத்திற்கு எத்தனை உறுதுணையாக இருக்கிறார்களென்பது நமக்குத் தெரியும். இதனல் முன் கூறியவரையும் குற்றத்திற் காளாக்க விரும்பவில்லை.

இன்றைய இந்திய சீர்கேடான அமைப்பிலும் பெண்களின் ஏழ்மைத்தன்மையிலும் சிறிது கவனம் செலுத்தி இனி டிப்டிகலெக்டர் தக்கவாறு நடத்தை எடுத்துக் கொள்வாரென்றதுணிபில் இதனை இதோடு முடிக்கின்றோம்.

பெண்கள் உலகம்

ஹெர்வியா

சுயேச்சை பெற்ற சொவியா நாட்டில் பெண்களை விற்கும் அடிமைப்பழக்கம்இருந்துவருகின்றது பெண்களை கல்யாணம் செய்துகொடுத்து புருஷன் வீட்டிற்கு போய்விட்டால் அவர்களுடைவேலையின்பயனை பெற்றோர்கள் பெறமுடியாது போகும் காரத்தால் பெண்களைக்கொண்டு பணம்வாங்குவது நியாயமென்று வாதிக்கப்படுகிறது. விவாகங்கள்தரகர்களின்றி நடைபெறுவதில்லை. வியாபார குடும்பத்தில் பிறந்த அழகிய யுவதிகளுக்கு அதிகப்பணம் கொடுக்கப்படுவது சகஜம். ஆனல் தரித்திரவாழ்க்கைக்கு ஆளான விவசாயப் பெண்களின்நிலைமையோ பரிதாபகரமானதுதான். உலகில் பணம் படைத்தவனுக்கு ஏராளமான பணம் சேர்ந்து கொண்டிருப்பது போலவே, சொவியாபெண்களின் நிலையும்உயர்ந்துவருகிறது ஆண்பெண்இருபாலர்களுடையே மனமொத்த சம்பந்தத்தை விட பணப்பேச்சுங்குத்தான் மதிப்பு அதிகம். பெண்ணுக்கு அட்வான்சாக சிறுகொகையாவது முதலில் கட்டி விட்டால் கல்யாணப் பேச்சு முடிந்ததாகும்; பாக்கியுள்ள பணத்தை குறிப்பிட்ட தவணைகளில் கட்டிவிடவேண்டும்; இது மீறப்படுமானல் பெற்றோர்கள் தங்கள் பெண்ணைத்திரும்ப அழைத்து பணம் கொடுக்கும் வேறு புருஷனுக்கு விற்றுவிடலாம், அல்லதுமாப்பிள்ளை மாமன் வீட்டில் வேலைசெய்து கடனைத்தீர்க்கவேண்டும். இத்தநாட்டில் வயது சென்றவர்களுக்குபெண்கள்கிடைப்பதுபெருங்கஷ்டம்.பெண்களுக்கு10வயது ஆவதற்குள்ளேயே பெற்றோர்கள் முந்திக்கொண்டு முன் பணம் வாங்கிவிடுவார்கள். பெண்ணுக்காக்கொடுக்கப்படும் பணத்தில் ஒரு பகுதிபெண்ணிற்கும்மற்றொருபகுதிபெற்றோர்களுக்கும்உரியதாகும்

கிராம சீர்திருத்தம்.

(தோழர் எஸ். கே. சாமி)

இந்தியாவில் சுமார் 7 லக்ஷத்து 5 கிராமங்களும், 2 000 நகரங்களுமிருக்கின்றன. மொத்தம் ஜனத்தொகை 35 கோடி. நூற்றுக்கு 10 பேர் மட்டும்நகரங்களிலும் மீதிபுள்ளவர் கிராமங்களிலும் வசிக்கின்றனர். ஆகவே இந்தியாநாட்டின் உண்மை சீர்திருத்தம், கிராமங்களின் முன்னேற்றத்தையும், அபிவிருத்தியுமே அடங்கியுள்ளது என்பதை எத்தனை அறிவாளியும் மறுக்கமாட்டானென்பது மூக்காலும் உறுதி. பெரும் பகுதியரான மக்கள் கிராமங்களில் வருந்தி வருவதோடு நகரமக்களின், உணவு பொருள்கள் எல்லாம் கிராமாந்தரங்களிலேவசிக்கும் விவசாயிகளாலேயே அளிக்கப்பட்டு வருவதென்பது கண் கூடு. கிராமங்களில், கால் நடைகளை பேணி வளர்த்தும், உழுது பயிர் செய்யும் ஏழைகள் உழைப்பின் பயனும் உபஜீவனம் செய்து வருகின்றனர். இவ்வேழைமக்களை எல்லாத்துறைகளிலும் மேன்பாடு பெற செய்வதே தேச சேவையின் முதல் அத்தியாயமாகும். இதையறிந்தே தேசபந்து சி ஆர். தாஸ் அவர்கள் கிராமபுனருத்தாரண திட்டம் காங்கிரசில் கொண்டுவந்தாரென்பதை நேயர்கள் மறந்திருக்கமாட்டார்களென நம்புகிறேன். ஆனால் காங்கிரசு சபை கிராமபுனருத்தாரண திட்டத்தை கடைமுறையில் கொண்டுவராதது பெருந்தவறாகும்.

இந்தியாவில் சுமார் 16 கோடி ஏக்கர் நிலம் பயிர் செய்யாமல் தரிசாகக் கிடக்கின்றது. இந்தியாவின் விளைவு ஏனைய தேசங்களை விட மிக மிக மோசமாகவே காணப்படுகின்றது. நம் நாட்டின் விளைவு ஜப்பான் தேசத்தின் விளைவில் கால் பங்காகவே காணப்படுகிறதென்று கணித சாஸ்திரிகள் கூறுகின்றனர். டாக்டர் கில் பெர்டு சிலேட்டர் அவர்களின் கணக்குப்படி, நம் நாட்டில் சுமார் ஐந்து குடும்பதாரினர் சோர்ந்து எடுக்கும் விளைவு சுமார் எட்டு குடும்பத்தார்களுக்கு போதிய உணவுக்குக கூட இல்லை தகுதியின்றியிருக்கின்றது. ஆனால் அமெரிக்கா, ஐரோப்பா முதலிய தேசகளில் ஐந்து குடும்பங்களின் உழைப்பு ஐம்பது குடும்பங்களுக்குதவுகின்றதெனறால், விவசாயத்தில் நம் நாடு எத்தனைதூரம் கேவல நிலையிலிருக்கின்றதென்பதை இயம்பவும் வேண்டுமோ? இவ்வித விவசாய ஜீவனத்தின் காரணம்யாதென்பதை கவனிப்போமாக!

கிராமவாசிகளும்ஏழைதொழிலாளிகளும், வறுமை பிணியால் வதைக்கப்படுகின்றனர். ஆனால் சோம்பேறி முதலாளிகள் உண்மைஉழைப்பின்றி உண்டு களித்து உற்சாகம் கொள்கின்றனர். நெற்றியர்வை நிலத்தில் சிந்த காலைமுதல்மாலைவரை கொடிய வெயிலில் அடைமழையிலும் உழைத்துவரும் தொழிலாளரின் துயரம் கூடும் தரமென்று இவர்களது உழைப்பின் பயனை உண்டுகளிக்கும் முதலாளிகளாவது கவனிக்கின்றாரா? இதோடுநில்லாமல் ஏழைதொழிலாளிகளையும் கிராமங்களில் வதியும் விவசாயிகளையும் அடக்கி ஒடுக்கி நசுக்கி வருகின்றனரென்றால், இதை விட அனியாயம் வேறுளதோ! அரசாங்கம் வரிசுருல் செய்வதும் பெரும்பாலும் கிராமங்களிலிருந்தேயாகும். கிராமங்களின் பணத்தை வரியென்று பிடுங்குவதில் மட்டும் அரசாங்கம் கண்ணும் கருத்துமாயிருப்பதேயன்றி உருப்படியான கன்மை யொன்றும் செய்வதில்லை. கிராமங்களின்சுகாதாரமுறைகளுக்குறித்து அணுவளவும்கவனிப்பதில்லை, போலீஸாரின்பாதியும்கிராமத்தையே சார்ந்துளது. திருவிதாங்கூரிலிருக்கும் போலீஸ் இனஸ்பெக்டர் காண்ஸ்டேபிள் முதலியோர்கள் கிராமாந்தரங்களில் சென்று கிராம மக்களை தொந்தரவு பல செய்து பணம்பறித்துவருகின்றனராம். பல இடங்களில் மாலைவேளைகளில் கிராமங்களில் சென்று பலவித பொய் புகன்று காலைமுதல் மாலைவரை வேலை செய்து வீட்டிற்குதிரும்பும் தொழிலாளியிடம்அணுகிபயமுறுத்தி கூலிப்பணத்தில் பேர்பாதியை பிடுங்கிக்கொள்கின்றனர் மாலை 5 மணி வேளையிலும் வண்டியில் வினக்கில்லை என்ற காரணம்கூறி பணம் பறிக்கும் போலீஸ்காரர் பலர். இம்மாதிரி எண்ணிலடங்கா துன்பங்கள் ஏழை மக்களுக்கு ஏற்பட்டு வருகின்றன. இதைப்போலவே பலவிடங்களிலும் போலீஸ்புலிகள் நடனமாடுகின்றன. பெரும்பாலான நண்பர்கள் நம்மிடம் கூறுவதுமுண்டு. இவ்வாறு கூறின் மிக வீரியும், கவர்மெண்டார் நகரங்களின் வீதிகள் அமைக்கவும், மின்சாரவிளக்கு வைத்தர்ப்பங்கள் காட்டவும். காந்த ஸ்தூபிகள் கட்டவும், விளக்குகள் மாட்டவும், காரியாலங்கள் மிதம் மிஞ்சி கட்டவும், இன்னும் இவைபோன்றவைகள் செய்வதிலேயே கவனமுடைய வராகயிருக்கின்றனரேயன்றி, சுமக்க முடியாத வரிவசூல் கொடுத்துவரும்கிராம மக்களின்நன்மையை கருதுவதில்லை. மேலும் அவர்களுக்கு துன்பம் செய்யும் உத்தியோகஸ்தர்களுக்கு உரம் செய்துவருவதே நமக்கு மிகுந்த விசனத்தைக் கொடுக்கின்றது. இதிலிருந்து நகரங்களில் வீதிகள் அமைக்க வேண்டாமென்றோ காரியாலங்கள்நிர்மாணம் செய்யவேண்டா மென்றோ நாம் கூறமுன் வரவில்லை. நகரமக்களின் நன்மையைப் போலவே கிராமங்களின் நன்மையையும் கவனித்தல் வேண்டுமென்பதேயாகும்.

கிராம மக்களின் கல்வியின்மையே அவர்களது அறியாமைக்கும், பிற்போக்குக்கும் காரணமாகும் வழக்கம் பழக்கம், என்றெல்லாம் இயம்பி குருட்டுத்தனமாக தங்கள் முன்னோர் அக்காலத்துஒருவேலையை தருக்க முறையென்றெண்ணி கையாண்டுவந்த விதிகளையே விவசாய விஷயத்திலும் மற்றெல்லா விஷயங்களிலும் அனுசரித்து வருகின்றனர் என்பது பொதும் வருந்தத்தக்கதும் இரங்கத்தக்கதுமாகும். மேனாட்டு விவசாயிகள் நவீன ஆராச்சியின் பயனை அநாதியவிளைவெடுத்து இன்புற்று வாழ்வதை கண்டும், கேட்டும், நம் நாட்டினர் இன்னும் பழைய முறைகளையே அனுசரித்து வருகின்றனரென்பது கண்கண்ட காரியாகும். விஞ்ஞான சாஸ்திர நுட்பத்தினால் விளைவை மேனாட்டார் அதிகரித்து வருகின்றனர். அரசாங்கத்தாரின் உதவி அந்நாட்டார்க்கு கிடைப்பது போல, நம் நாட்டில்இல்லையென்பதையும் ஈண்டு குறிப்பிடாமலிருக்க முடியாது.

நாட்டின் முன்னேற்றத்திற்கு அடிப்படையாகிய கிராம சீர்திருத்தங்கள் பலவுள. என்றாலும் அவைகளில் மிக முக்கியமானது கிராமவாசிகளின் கல்வி அபிவிருத்தியேயாகும்.

கல்வி அபிவிருத்தி.

கிராம முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையாயிருப்பதில் பிரதானமானது கல்வியின்மையேயாமென்பது மறுக்கப்பாலதன்று இந்நிலையில் நகர மக்களின் முன்னேற்றம் உண்மை முன்னேற்றமாக. எனெனின் பொதுவாக நாட்டின் முன்னேற்றம் பெரும்பாலும் கிராம மக்களின் முன்னேற்றத்தையே அடிப்படையாகக் கொண்டுளது. முயற்சியின்மை, தூரமை, அறியாமை முதலிய அற்ப குணங்களை அறவே அகற்ற நன்மருந்தாகும். கல்வியை கவனமுடன் நாட வேண்டும். சீர்திருத்த விஷயங்களைப் பற்றி பத்திரிகைகளில் எழுதவேண்டும். கிராமாந்தரங்களில் பள்ளிகள் பல நிறுவப்படவேண்டும் இராப்பாடசாலைகள் நிறுவி ஏழை தொழிலாளர்க்கு கல்வி கற்றுக் கொடுக்கவேண்டும். ஆனால் பி ஏ., எம்.ஏ., முதலிய பட்டங்கள் பெற வேண்டுமென்பதில்லை. அப்பட்டங்கள் தற்பொழுது காற்றில் பறப்பதை கண் கூடாக கண்டு வருகிறோம். கானடா (canada) தேசத்து விவசாய மந்திரி, இதையறிந்தே அந்நாட்டின் தொழிற் கல்விக்கு வேண்டிய எல்லா உதவிகளையும் புரிவதாக வாக்களித்திருக்கின்றனர். சுமார் 7 லக்ஷம் கிராமங்களையுடைய நம் நாட்டில் தகுந்த தொழிற் கல்விச்சாலைகளில்லை யென்பது யாவருமறிந்ததே. ஆங்காங்கு காணப்படும் பள்ளிக்கூடங்களின் படிப்பு முறை பாழடைந்ததே யாகுமென்ற கூறவும் வேண்டுமோ! உயர்தர பாடசாலைகள் கிராம மக்களுக்கு ஒருபொழுதும் உதவியளியாதென்பது நிண்ணம். ஓடம், நோச்சம் இவை புனர்ச்சுத்தம் காட்டினற்கேற்ற முறையில் குழந்தைகளுக்கு கல்வி கற்ற கொடுக்கவேண்டும்.

இவ்வாறு சமயசந்தர்ப்பங்களோசனைகளுக்குறித்து, கிராமபிள்ளைகளுக்கு தொழிற் கல்விகற்பித்து கொடுக்கவேண்டுவது நாட்டின் கண்ணிலக்கு ஏற்றவழியாகும். அஃதன்றி இலக்கிய ஆற்றலின் கம்பீரத்தைக் குறித்த பிரசங்கமோ, அல்லது சைவசித்தாந்த நுட்பங்களைப்பற்றிய சொற்பொழிவுகளோ, கிராமத்தாருக்கு சற்றும் தேவையில்லையென்பதோடு கெடுப்பதுமாகும். பகுத்தறிவை மழுங்கச்செய்து, முயற்சியின்மையை எளெருமேனியும், பொழுதோருவண்ணமுமாகவளர்த்து மக்களை மடையர்களாக்கும் மூழ்வினைப்பயனைப்பற்றியே அவ்வூழ்வினையின் ஆதாரமாகிய கடவுள் சக்தியைக்குறித்தோ குழந்தைகளுக்கு என்றும் சொல்லக்கூடாது என்பதை அழுத்தம் திருத்தமாக ஈண்டு குறிப்பிடுகிறோம். தவனன்றி ஓர் அணுவும் அசையாதென்றநம்பிக்கை குட்பட்டதினாலேயே நம் நாட்டு விவசாயம் குன்றி நாம் எல்லோரும் அடிமை யிருளினால் கட்டுண்டு அவதிப்படுகின்றோம். கிராமவாசிகளுள் பலர் கல்வியறிவு பெற்றிராதகினால் அவர்களுக்கு கண்-மூக்கு-செவி முதலிய ஐம்பொறிகளின் வழியாகவே கல்வி போதிக்கவேண்டியதாயிருக்கின்றது. உப்பு வாயு அமோனியா முதலிய உரவகைகளைக் குறித்து கிராம மக்களுக்கு போதித்து, நவீன முறையில் விவசாயம் செய்ய தூண்டவேண்டும். நவீன முறைகளின் கண்மையை பிரத்தக்ஷ நடமுறையில் செய்து காட்டவேண்டுவது மிகவும் அவசியமாகும். அப்படியானால்தான் ஏழை விவசாயிகளும் இத்துறையில் ஈடுபட்டுழைத்து எல்லையில்லா லாபம் அடைந்து இன்புற்று வாழ்வர். அரசாங்கத்தார் இவ்விஷயத்தில் ஆதரவு அளிக்கவேண்டும். அயல் நாடுகளுக்கு மாணவர்களை அனுப்பி அந்நாட்டு விவசாய முறைகளை கற்றுவரசெய்யவேண்டும். இதுபோது கிராம முன்னேற்றம் என்ற கூக்குரல் இந்தியா முழுவதும் கேட்கப்படுகின்றதாயினும் யாதும் உருவானத்திட்டங்கள் வெளிப்பட்டதாக அறியக்கூடவில்லை.

நமது நாட்டார் கிராமபுனருத்தாரண விஷயமாக கவனம் எடுத்துக் கொள்ளாதது மிகவும் வருந்தத் தக்கதேயாகும். கிராமங்கள் உண்மையான சீர்திருத்தம் பெற வேண்டின் பொருளாதார விஷயத்தை ஆதாரமாகக் கொண்டே பரி சேவை செய்ய வேண்டும். தொண்ணூறு சதமானம் கிராம மக்கள் கடன் பளுவாலேயே மூழ்கிக் கிடக்கிறார்கள். தலை முறைதலை

ஒதுக்கிவைத்து கிராமப் புனருத்தாரண நிட்டங்களை வகுத்துத் தொண்டாற்ற வேண்டும். உலக ஞானத்தை கிராம வாசிகளுக்கு இலகுவாகப் பெறுதற்குரிய வாசக சாலைகள், கிராம சுகாதாரம், வைத்தியம், கால் நடை பேணல், சமதர்மஞானம், இவைகளை கவனிக்கத் தக்க இயக்கங்கள் ஏற்படல் வேண்டும். இவைகளைச்சாதித்துக்கொள்வதற்கு கூட்டுறவு முறையினுல் தான் முடியுமென்பதை நேயர்கள் கவனிக்க வேண்டுமென கேட்டுக்கொள்கிறோம். கூட்டுத் தொழிலின் மேன்மையினுலேயே மேலுட்டார் இன்று உலக மேதாவிகளாக திகழ்கின்றனரென்பதை நாம் அறிகின்றோம். அங்குமிங்கும் அலைந்து திரியும் பறவைகளும்கூட்டுறவினுலேயே உலகில் உயிர்வாழ்கின்றதைக்காண்கின்றோம் ஆகவே மக்களுள் கூட்டுத் தொழிலிலேயே கவனம் செலுத்த வேண்டுவது மிகவும் அவசியம். ஒவ்வொரு கிராமத்தாரும் தனித்தனியே தங்கள் தங்கள் கிராமத்திற்சென ஒவ்வொரு கூட்டுறவு சங்கங்களை நிறுவி அச்சங்கத்தின் அங்கத்தினராக அக்கிராமத்திலுள்ள ஒவ்வொரு தொழிலாளியும் பதிவு செய்து கொள்ளல் வேண்டும். இச்சங்கங்கள் செய்ய வேண்டிய வேலைகளில் மிக பிரதானமானவை:—

(1) நிதமாகவும், தூதனமாகவும் விவசாயத்தை நடாத்த விற்பன்னர்களைக் கொண்டு, மண்களை ஆராய்ச்சி செய்வித்து அதனதன் தன்மைக்குத் தக்க எருக்கள் இன்னதென்று கிராமத்தாருக்கு அறிவிப்பது.

(2) விளை பொருள்களை நஷ்டமின்றி விற்பதற்குரிய வசதிகளை ஏற்படுத்துவது.

(3) தண்ணீர் வசதிக்கு வேண்டியவை தட்டில்லாமல் செய்வதில் ஜாக்கிரதை செய்ய வேண்டும்.

(4) கிராமங்களில் என்னென்ன குடிசைத்தொழில்கள் கூட பெருக்கூடுமோ, அவைகளைக்கண்டு பிடித்து நடப்பித்து விருத்தி செய்ய வேண்டும்.

(5) பிற நாட்டுக்கு மாணவர்களை அனுப்பி அந்நாட்டு விவசாய முறையை கற்று வர ஏற்பாடு செய்ய வேண்டும்.

இந்த விதமான காரியங்களைசமய சந்தர்ப்பத்துக்கேற்ப பொறுப்பைக் கிராமசங்கங்கள் மேற்கொண்டு நடத்தப்படவேண்டும். சாத்தியமான கிராமத்தொழிலை செய்முயற்சியெடுத்துக்கொளக்மிக அவசியம். அன்றியும் கிராம பஞ்சாலைகள் நிறுவப்பட வேண்டும். விளைபொருள்களை பஞ்சாலையில் கூட்டிவைத்து கொள்வதோடுநில்லாமல், கிராமத்தாரின் வாழ்க்கைக்கு வேண்டிய பொருள்கள் யாவையும் கிடைக்கு மிடங்களிலிருந்துவாங்கிஅதிக லாபமின்றி குறைந்த விலைக்கு கிராமத்தாருக்கு உதவ வேண்டும்.

ஒவ்வொரு தாலுக்காவிலும் ஒவ்வொரு தொழிற் பள்ளிக்கூடம் நிறுவவேண்டும் சாத்தியமான கிராமத் தொழிலை கற்பித்து கொடுத்தல் கிராமமுன்னேற்றத்துக்கு ஏற்ற வழியாகுமென்பது உறுதி. நிறமையுடையோருக்கும் ஏழைகளுக்கும்உபகாரசம்பளம் அளித்துஅவர்களை அபிவிருத்தியடைய செய்யவேண்டும். தேர்ச்சி பெற்றவர்களுக்கு உத்தியோகம் தேடி கொடுக்கும் பொறுப்பும் அந்த ஸ்தாபனங்களை சேர்ந்ததேயாகும். பி. ஏ. எம். ஏ. முதலிய பட்டங்கள் பெற்று வேலைகிடைக்காது அங்குமிங்கும் அன்னக்காவடிகள் போல அலைந்து திரிவதை நாம் கண்டுவருகிறோம். இவ்வாறு பட்டதாரிகள் பகலும் இரவும் ஓயாது உத்தியோகம்தேடி லர்டிப்பிச்சட்டும் கையிலேந்தி அங்குமிங்கும் வெறிகொண்டவன் போல அலைந்து திரிவதைவிட,இப்பாழும் பட்டங்கள் வழங்கும் உயர்தர கலாசாலை படிப்பை நிறுத்தி தொழிற் கல்வி முறையை பரப்புவதே நமை பயப்பதாகும். விவசாய ஆராய்ச்சிசாலை அமைத்துஅதன் மூலமாகபல ஆராய்ச்சிகள்செய்து, நிறம்படவீனை முறைக்கு விவசாயம் செய்வதினுல் பெருத்தலாபம் கிடைக்குமென்பது திண்ணம். பத்திரிகை சாலையொன்று ஏற்ப்பாடு செய்தல்வேண்டும். அதன்மூலமாகவே ஒவ்வொரு கிராமவிஷயங்களையும், பல பேர்அறியும்படி பிரசுரித்தல் வேண்டும். வேறு விஷயங்களும் வெளிநாட்டு விவசாயமுறைகளும் பத்திரிகையில் இடம்பெறுவது இன்றியமையாததாகும்.

இவ்வாறு நாட்டின் நன்மைக்கும் நன்னிலைக்கும் ஜீவகாடியாகிய காரியங்களை நமது நாட்டார் ஊக்கத்துடன் செய்வாராயின், ஆக்கத்திலும், ஊக்கத்திலும் சேர்ந்து, அறிவு மகிமை விவசாயம் குன்றி பொன்னிழந்து வாடிவதங்கும் நமது தேசம், எந்நாடாரும் போற்றிஏற்றி புகழ்வதற்குரிய பொன்னாடாகி திகழுமென்பது முக்காலும் உறுதி. ஆகவே தேசமுன்னேற்றத்திற்கு ஆணிவேராயிருக்கும் கிராமசீர்திருத்த விஷயத்தில் கவனமசெலுத்தவேண்டுமென்று பொது ஜனத்தலைவர்களையும், சீர்திருத்தப்பிரியர்களையும், பகுத்தறிவுள்ள தோழர்களையும், பணிவுடன் பரிந்துகேட்டுகொள்கிறோம்.

———

(4ம் பக்கத் தொடர்ச்சி)

னைக்கூறுகின்றனர். இதுமுற்றிலும்தவருகும். ஒருமனிதனைவன்கொலை களவுமுதலியவற்றை ச்செய்யாமல், உண்மையே பேசி, பொதுமக்களுக்கு தீங்குபயக்காமல் வாழ முயற்சிப்பது மனிததருமமாகும். ஆனல்இந்தமதத்தை நம்பினுல் தான்வாழ்க்கை கடத்தலாம் எனக்கூறுமின், மதமின்றேல் மனிதன்பதின் மடங்கு இன்பமாகவும், ஒற்றுமையுடனும் வாழலாம் என்பதற்கு போதிய சான்றுகளிருகின்றன. உதாரணமாக இன்றும் நாட்டிலுள்ள பல சிரைச்சாலர்களை எடுத்துக்கொள்வோம் அங்குகைதிகளென அடைக்கப்பட்டுள்ளவர்களில் பெரும் பாலோரும் (ஒரு சில அரசியல்கைதிகளைத்தவிர) கொலைகளவு, பொய்மதலிய குற்றங்களுக்காக தண்டிக்கப்பட்டவர்களே யாவராகள். இவர்கள் அனைவரும் கடவுளையும் மதத்தையும் நம்பும் மதபக்தர்களே. யாவர்கள் அவர்களும் ஒரு மத நம்பிக்கையற்றவனைக் காணுவது அரிதாகும், இவைகளுக்கெல்லாம் காரணம் மதத்தை நம்பவேண்டுமென்பதல்ல, ஆனல் இளமையில் மாணவி, மாணவர்களுக்கு, கல்வியைகற்பிக்கையில் அவசியமற்ற 'மதக்கல்வி' யை போதிப்பதின்பயனுகும். ஆகையினுல்தான் நம் இளைஞர்கள் சுதந்திர உணர்ச்சியற்றவர்களாய பல தீங்குகளைசெய்கின்றனர். இன்று இங்கிலாந்து போன்ற மேலுடுகளில் மதக்கல்வியற்ற பல கலாசாலைகளிருகின்றன. ஆங்கு ஆயிரக்கணக்காணவர்கள் கல்வியின்று ஒழுங்காக ஜீவிக்கின்றனர். உதாரணமாக டோரா ரஸ்ஸம் நடத்தும் இங்கிலாந்திலுள்ள கல்விச்சாலையில் மதத்தைப்பற்றி ஒரு வார்த்தை கூட கற்பிப்பதில்லை அங்கு கல்வி பெற்று வெளியேறுபவர்கள் மதக்கல்வி கலாசாலைகளில் கல்வி பயில்கின்றவர்களை விட மிகவும் அறிவாளிகளாய் உலகிற்கு நன்மை பயக்கின்றனர். ஆதலால் மனிதவாழ்க்கை மதமில்லாமல் ஒழுக்கத்துடன் நன்கு நடத்தமுடியும் என்பதை நம் நண்பர்கள் உணர்ந்துக் கொள்ளவேண்டும்.

———

(3ம் பக்கத் தொடர்ச்சி)

ண்டிதகுழாங்களும், பொதுஜனங்களும், சுயமரியாதைக் கொள்கைகளையும், தமிழன் மீது நாம் கொண்டபற்றையும் தமிழ் பாஷையின் முன்னேத்திற்கும் நாம் செய்ய விரும்பும் தொண்டுகளையும் தமிழர்கள் அறிய இது நல்ல சந்தர்ப்பமாகும் இவ்வறிய சந்தர்ப்பத்தை நமது தோழர்கள் இழந்து விடமாட்டார்கள் என்று உருதியாய் நம்புகிறேன்.

சுயமரியாதைத் தோழர்களே! சுயமரியாதைக்காரர்கள் மகா நாடா? என்று சைவத்தலைவர்கள் ஐயமுறும் படி திரள் திரளாய் திருநெல்வேலி தமிழர்கள் மகாநாட்டிற்குச் செல்லுங்கள். நமதுவிஜயம்சுயமரியாதைஇயக்கத்திற்கு ஒருபெரும் வெற்றியையும் நற்பெயரையும் உண்டாக்கும்.தோழர்காள்! மேமாதத்தில் தமிழர் மகாநாட்டில் சைவர்கள் நெஞ்சம்திடுக்கிடஒன்று கூடுமின்!

'சுந்தரி ஸ்னோ.'

ஒரு சுந்தரிஸ்னோ வாங்குவோருக்கு ஒரு பைதுட்டை இலவம்.

சுந்தரி ஸ்னோ தோலைப் பட்டுப்போல் மிருதுவாகவும், அழகாகவும், பிரகாசமாகவும் செய்வதோடு முகத்தில் உண்டாகும் வேர்வைக்கட்டி, பரு, மரு முதலிய தோல்வியாதிகளையும் போக்கி தோலுக்குப் புத்துயிர் அளிக்கிறது. நறுமணம் கமழ்வது. விலை மலிந்தது.

ஏஜண்ட்:- A. V. R. A.
அடைக்கப்ப செட்டியார்,
52-பந்தர் தெரு, சென்னை.

"பானியால் டூத் பேஸ்ட்"

பல்லுக்கு உறுதியளிக்கவல்லதென பல நூற்றாண்டுகளாக ஆன்றோர்களால் போற்றப்படும் ஆலம் விழுதின் சத்தினுல் தயார்செய்யப்படுவது. வாயை சுத்தம் செய்து, ஈறுகளைக் கெட்டிப்படுத்தி, பற்களுக்கு உறுதியளித்து, பற்களை முத்துப்போல் பிரகாசிக்கச் செய்கிறது.

ஸ்டாக்கிஸ்ட்
A. V. R. A. அடைக்கப்ப செட்டியார்,
52, பந்தர் தெரு, சென்னை.

குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

இந்தியாவின் குறைபாடுகள்.

இது பம்பாய் அரசாங்கக் கல்வி மந்திரியாயிருந்த டாக்டர் பாஞ்சபே M. A., D. Sc. அவர்களால் எழுதப்பட்டு லண்டன் R. P. A. சங்கத்தாரால் வெளியிடப்பட்ட ஓர் அறிவும், அனுபவும் ஆராய்ச்சியும் கொண்ட தான அறிய நூலின் தமிழ் மொழிபெயர்ப்பாகும்.

விலை அணு 8.

லெனினும் மதமும்.

இது பொதுவுடமைக் கொள்கை வீராகிய V. I. லெனின் அவர்களால் எழுதப்பட்ட புத்தகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பாகும்,

விலை அணு 4.

பொதுவுடமைத் தத்துவங்கள்.

ஐக்கிய அபேதவாத சமதர்ம குடி அரசு நாட்டின் உயரிய லட்சியங்களை வற்புறுத்தும் மிகச் சிறந்த நூல்.

விலை அணு 3.

கடவுளும் பிரபஞ்சமும்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களால் எழுதப்பட்ட நாஸ்திகம் நிறைம்பிய நூல். விலை அணு 4.

கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது தமிழ்நாட்டுப் புராணங்கள் அனைத்திலும் உள்ள மோசடிகளை மெய்ப்பிக்கும் நூல். தமிழ் நூல் பாண்டித்தியம் பெற்ற சுவாமி கைவல்யத்தால் எழுதப்பட்டது.

விலை அணு 8.

இராமாயண ஆராய்ச்சி.

இராமாயணத்தின் சகல ஆபாசங்களும், ஊழல்களும் இதில் கண்ணாடி போல் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது.

பாலகாண்டம் அணு 4.
அயோத்தியாகாண்டம் அணு 8.

ஞானசூரியன்.

வேதம், புராணம், ஸ்மிருதி, மதம் முதலியவைகளின் மிகக் கொடிய ஆபாசங்கள் விளக்கிக் காட்டும் பெரிய புத்தகம்.

விலை அணு 4.

தர்ம பரீக்ஷை.

இது புராண காலத்திலேயே எழுதிவைக்கப்பட்ட புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் நூல். விலை அணு 3.

மேயோ கூற்று.

தோழர் C. A. அய்யாமுத்துவால் சித்தரித்துக் காட்டப்பட்டுள்ள இந்திய நாட்டின் நிலைமையை விளக்கும் நூல்.

விலை அணு 3.

பங்கஜம்.

பார்ப்பனப் புரட்டை தெள்ளிதில் விளக்கும் நாடக நூல்.

விலை அணு 4.

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

பகுத்தறிவு வெளியீடுகள்.

பெண் ஏன் அடிமையானாள்?

இந்நூல் ஈ. வெ. இராமசாமி அவர்களால் கற்பு, காதல், விபசாரம், கைம்மை, மறுமணம், விவாகரத்து, கற்பழித்தடை, சொத்துரிமை ஆகியவைகளை தர்க்கரீதியாய் ஆராய்ந்து எழுதப்பட்ட தொகுப்பாகும். விலை அணு 5.

முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை

இந்நூல் சார்லஸ் T. கோர்ஹாம் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு K. M. பாலசுப்பிரமணியம் B. A. B. L. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இதில் மக்களின் முன்னேற்றத்தையும், விஞ்ஞான வளர்ச்சியையும், மதம் எவ்வாறு தடுத்து வந்தது என்பதைச் சரித்திர பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணு 5.

நான் ஏன் கிறிஸ்தவனல்ல?

இந்நூல் பேர்ட்டிரண்ட் ரசல் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு S. குருசாமி B. A. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இது கடவுளைப்பற்றியும், கிறிஸ்துவைப்பற்றியும் தெள்ளத்தெளிய ஆராய்ந்து எழுதப்பட்ட ஆராய்ச்சி நூல். விலை அணு 3.

மதம் என்றால் என்ன?

இந்நூல் ராபர்ட் G. இங்கர்சால் அவர்களால் ஆங்கிலத்தில் இயற்றப்பட்டு தோழர் S. லட்சுமிரதன்பாரதி M. A., B. L., அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இந்நூலில் மதங்களின் தன்மையையும், கடவுளின் தன்மையையும் நன்கு எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது.

விலை அணு 2.

கடவுள்.

இந்நூல் கர்னல் ராபர்ட் ஜி. இங்கர்சால் அவர்களின் ஒரு அரிய சொற்பொழிவாகும். இதில் உலகிலுள்ள பல வேறு கடவுளின் தன்மையும் உலகத்தோற்றத்திற்குக் காரணமாக ஓர் கடவுளிருக்க முடியாது என்பதையும் விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது.

அழகிய ரேப்பருடன் இங்கர்சாலின் வரலாறும், ஆர்ட் பேப்பரில் அவரது உருவப்படமும் சேர்க்கப்பட்டுள்ளது 100 பக்கங்கள் கொண்டது. விலை அணு 5.

மதம் மக்களுக்குச் செய்த நன்மை என்ன?

இந்நூல் Hon. பேர்ட்டிரண்ட் ரசல் M. A. F. R. C. S. அவர்களின் சொற்பொழிவு. தோழர் C. K. மருதாச்சலம் B. A. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. மதம் எவ்வாறு மக்கள் முன்னேற்றத்திற்கு தடையாயிருக்கிறது என்பதை விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது.

விலை அணு 3.

நான் சம்சயவாதி ஆனதேன்?

இந்நூல் ராபர்ட் ஜி. இங்கர்சாலின் சொற்பொழிவு. இதில் தான் கடவுளைப்பற்றிக் கவலைப்படாத [illegible] தக்குரிய காரணங்களைத் தெள்[illegible] யிருக்கிறார்.

புத்தகங்கள் வேண்டுவோர் பு[illegible] ஒரு அணா ஸ்டாம்பு கூடுதலாக அனுப்[illegible]

பகுத்தறிவு நூற்பதிப்[illegible] லிமிட்[illegible]

பகுத்தறிவு.

சுயமரியாதை தினசரி.

சமய சமூக அரசியல் விடுதலைக்குப் பாடுபடும் போராடும் தமிழ் தினசரி இது ஒன்றே. சர்வ தேசசம்மந்தமான விடுதலைபோராட்டச்செய்தி கள் உடனுக்குடன் தெரிவிக்கப்படும். ஆனித் தரமான அபிப்பிராயங்களைத், தூய்மையான கண்டனங்களும், தெளிவுபடக் காணலாம்.

எங்கும் கிடைக்கும்.

தனி இதழ் காலணை.

தபாலில் மாத சந்தா ஒரு ரூபாய்.

ஆறு மாத சந்தா ரூ. 5.

வருட சந்தா ரூ. 9.

மானேஜர்,

"பகுத்தறிவு" ஈரோடு.